# பண்பாட்டுச் சிதைவுகள்

(சிந்திக்க மட்டுமன்று ; செயலாற்றுதற்குமாம்)



இரா. இளங்குமரனார்

# பண்பாட்டுச் சிதைவுகள்

(சிந்திக்க மட்டுமன்று ; செயலாற்றுதற்குமாம்)

இரா. இளங்குமரனார்

**திருவள்ளுவர் தவச்சாலை**

திருவளர்குடி (அல்லூர்)

திருச்சிராப்பள்ளி மாவட்டம் - 620 101

தொலைப் பேசி 0431-2685328

# நூற்குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | பண்பாட்டுச் சிதைவுகள் |
| ஆசிரியர் | இரா. இளங்குமரனார் |
| மொழி | தமிழ் |
| பொருள் | பண்பாடு |
| முதற் பதிப்பு | சூலை 2013 |
| பக்கம் | viii + 80 = 88 |
| எழுத்து | 13 புள்ளி |
| தாள் | 13.7 வெள்ளை தாள் |
| அளவு | 1/8 |
| படிகள் | 1000 |
| விலை | உருபா : 45/- |
| உரிமை | ஆசிரியர்க்கு |
| வெளியீடு | திருவள்ளுவர் தவச்சாலை<br>அல்லூர் - 620 101,<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| நூலாக்கம் | "தி பிரிண்டிங்கு அவுசு"<br>திருச்சிராப்பள்ளி - 23 |

நூல் கிடைக்குமிடம்:

**திருவள்ளுவர் தவச்சாலை**
அல்லூர் 620 101, திருச்சிராப்பள்ளி மாவட்டம்,
தொலைப்பேசி எண் : 0431 - 2685328

# பண்பாடு என்றால் என்ன?

இவ்வினாவுக்கு நாம் விடை சொல்ல வேண்டாமலே **நல்லந்துவனார்** என்னும் சங்கச் சான்றோர் **கலித்தொகையில்** கூறியுள்ளார்.

"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்" என்கிறார்.

"பண்பு எனப்படுவது யாது என்றால், பிறர் மெய்ப்பாட்டை -உள்ளுணர்வை- உணர்ந்து நாம் நடந்து கொள்வதாகும்" என்பது இதன்பொருள். பாடு - மெய்ப்பாடு!

கரடு முரடான நிலத்தை விளை நிலமாக்க என்ன செய்கின்றனர்?

உழுது, கட்டியுடைத்து, உரமிட்டு, வளப்படுத்தி விளைநிலமாகத் தக்கவாறு செய்தலைப் **பண்படுத்துதல்** என்கிறோமா இல்லையா?

பண்பாடு நாகரிகம் என்பவற்றில் பண்பாடு அகம் தொடர்பானது; நாகரிகம் புறம் தொடர்பானது. எனினும் அவற்றின் நுண்பொருள் பண்டே மாறி அக நாகரிகம் புற நாகரிகம் எனவும், இரண்டற்கும் வேறுபாடு இல்லாமலும் ஆய்விட்டன.

பழக்கம், வழக்கம், ஒழுக்கம் என்பவை, ஒருவர் கொண்ட நன்முறை தொடர்ந்து, அதுவே அவர் இயல்பாகி, அவ்வியல்பு பிறரையும் வயப்படுத்தி, அவரையும் அவ்வியல்பினராக நடக்க வைப்பது என்றும் தொடர்நிலையேயாம்.

பண்பட்ட குடும்ப நிலைக்கும் பண்படாக் குடும்ப நிலைக்கும் வேறுபாடு உண்டு.

ஒருகுடும்பத்திலேயே பண்பட்டவர் இயல் செயலுக்கும் பண்படாதவர் இயல் செயலுக்கும் வேறுபாடு இருத்தல் வெளிப்படை. அதனால் தான், "நீ இன்னார் மகனா? நீ இன்னார் உடன் பிறந்தவனா? அவருக்கும் உனக்கும் என்ன ஒட்டு?" என்று வினாவுதல் உண்டாகிறது! அது கேட்டு நாணுவாரும் உண்டு என்பது வரலாற்றுப் பதிவும், நடைமுறையுமாம். அதற்கு மாறாம் நிலையும் இல்லாமல் இல்லை. முந்தை மாந்தரும், முந்தை மொழியரு மாகிய நம்மவர் பண்பாடு, நாகரிகம் ஆகியவை

மேம்படவே அமைந்தவை. வேண்டாதவை ஒன்றிரண்டு இருந்தால் குடிமை பேணா வாழ்வாலும், சிந்தனைச் சீர்மை இழந்ததாலும் ஏற்பட்டவையாம்; எனினும், நயனறிந்த சான்றோர் வகுத்த முறை வழுவற்றதாகவும் பாராட்டுக்கு உரியவாகவுமாகவே இருந்தன.

அருவிநீரில் ஆங்காங்குச் சேர்ந்த மாசுகளால் ஆற்றுநீர் மாசுபடுவதுபோல், கால இட சூழல் வகைகளாலும் அயல்நெறி வழிப்பட்டதாலும், சிந்தனையற்ற போக்காலும், அறிவியல் மேம்பாடு அழிவியலுக்குப் பயன்படுத்தப்பட்டதாலும், பிறப்புரிமை இழந்த கொத்தடிமையராக மாறிவிட்டதாலும், தம்நலச் சூழ்ச்சியர் தொடர் கேட்டாலும் நம் பண்பாடுகள் பெரிதும் சிதைவுக்கு ஆட்பட்டுவிட்டன. மீட்டெடுப்பு என்பதும் கல்லில் முட்டிய நிலையாகுமாறு தொடர்கேடுகள், கெடுப்பதே குறியாகிய தம்நலத்தாரால் குரங்குப் பிடியாகச் செய்யப்பட்டே வருகின்றன. தற்சிந்தனை இழந்த கண்மூடியர் இமையைத் திறவா இருண்மையராகவே இன்பங் காண்கின்றனர்.

இவற்றை எண்ணிய படைப்பே **பண்பாட்டுச் சிதைவுகள்** என்னும் இந்நூலாம்.

பெற்றோரைப் பேணல்,

கூட்டுக்குடும்ப வாழ்வு போற்றல்,

சுற்றத்தார் சுற்றப்பட வாழ்தல்,

குலமற்ற பிறப்பொப்புமைப் பற்றுமை,

திருக்குறளை வாழ்வியலாக்கல்,

மொழி இன நலப் பாதுகாப்பு,

அற நெறி அகலாக் கடைப்பிடி வாழ்வு

– என்னும் எழுமைப் பேறும் வாய்க்கப் பெற்ற பெருமையர்,

**திருவரங்கம் பொறிஞர் திருமதி க. சுப்பிரமணியனார் வசந்தா அம்மையார், அரும்பாவூர் மருத்துவர் திருமிகு க. கோபாலனார் தேன்மொழியார் ஆகிய 'இணை', 'இணை' உடன் பிறப்பினர்;**

அவர்கள், தம் பெற்றோர் '**கந்தசாமி அழகம்மை**' பெயரால் அமைத்துள்ள அறக்கட்டளை உதவியால் அவர்கள் நினைவுநாள் வெளியீடாக வரும் நூல் இது. முன்னும் அவ்வறக்கட்டளை தவச்சாலை வெளியீட்டுக்கு உதவியதுடன் தவச்சாலை அறக்கட்டளையராக விளங்குபவர்களும் அவர்கள். பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தன்ன அவ்வறக் கட்டளைத் தொண்டு நாளும் நாளும் சிறக்க வென வாழ்த்திப் பாராட்டுகிறேன்.

வழக்கம் போல் தவச்சாலை வெளியீடுகளை யெல்லாம் தம்வெளியீடாகவே கொண்ட நெஞ்சரும், அயராத் தொண்டரும், அறிவரும் ஆகிய முனைவர் **திரு பி.தமிழகனார்க்கும்,** பல்வேறு பணிநெருக்கடிகளுக்கு இடையேயும் தமிழ்த்தொண்டுக்கு உதவும் வகையால் காலத்தொடும் கருத்தொடும் பதிப்பித்து உதவும் திருச்சிராப்பள்ளி **அச்சுக் குழுமத்தார்க்கும்** நன்றியுடையேன்.

வாழிய நலனே! வாழிய நிலனே!

இன்ப அன்புடன்

**இரா. இளங்குமரன்**

20.ஆனி 2044

04.07.2013

# உள்ளுறை


| தலைப்பு | பக்கம் |
| --- | --- |
| 1. வணக்கம் | 1 |
| 2. பெயர் | 2 |
| 3. முன்னெழுத்து | 4 |
| 4. நம் எழுத்து | 5 |
| 5. நம் உரையாடல் | 6 |
| 6. நம் எண் | 8 |
| இன அழிப்பு | 10 |
| 8. உடுப்பு | 11 |
| 9. வரிசைகெடல் | 12 |
| 10. இசைமேடை | 14 |
| 11. கூத்து | 15 |
| 12. ஊர்ப்பெயர் | 16 |
| 13. பல்லி சாத்திரம் | 17 |
| 14. மேல் நோக்கு, கீழ் நோக்கு நாள் | 18 |
| 15. கோள்வலம் | 19 |
| 16. கிரகணம் | 20 |
| 17. பலியிடல் | 21 |
| 18. கடாவெட்டு, எருமைப்பலி | 23 |
| 19. தலையில் தேங்காய் உடைப்பு | 24 |
| 20. பிள்ளையார் கரைப்பு | 25 |
| 21. தென்கலை வடகலை | 27 |
| 22. சகுனம் (சொகினம்) பார்த்தல் | 28 |
| 23. பூக்கட்டிப் போடல் | 29 |

பக்கம்


| | |
|---|---|
| 24. கிளி சோதிடம் | 30 |
| 25. கயிறு சார்த்தல் | 31 |
| 26. வழிபாடு | 32 |
| 27. வேட்டுப் போடல் | 34 |
| 28. கடவுள் இல்லை | 35 |
| 29. பிறந்த நாள் | 36 |
| 30. காதணி விழா | 37 |
| 31. பூப்பு நீராட்டு விழா | 39 |
| 32. திருமணத் தரகர் | 40 |
| 33. பெண் பார்த்தல் | 41 |
| 34. பொம்மைத் திருமணம் | 42 |
| 35. காதல் மணத்தடை | 43 |
| 36. பொருத்தம் பார்த்தல் | 44 |
| 37. மாப்பிள்ளைக் கொடை | 45 |
| 38. திருமணம் | 46 |
| 39. திருமண வரவேற்பு | |
| 40. அம்மி மிதித்தல் | 48 |
| அருந்ததி காணல் | 49 |
| 42. தீ வலம் | 50 |
| 43. காசிச் செலவு | 51 |
| 44. மஞ்சள் அரிசி மலர் எறிதல் | 52 |
| 45. மொய்யெழுதல் | 53 |
| 46. ‘சண்டா’ குதியாட்டம் | 54 |
| 47. அறுபதாம் கலியாணம் | 55 |

| | பக்கம் |
|---|---|
| 48. தாலி களைதல் | 56 |
| 49. கைம்மைக் கொடுமை | 57 |
| 50. கருமாதி | 58 |
| 51. தச்சுச் செய்தல் | 60 |
| 52. புதுமனை புகுதல் | 61 |
| 53. மனையமைப்பு | 62 |
| 54. தெருவில் அருவறுப்பு | 63 |
| 55. சாலைச் செலவு | 64 |
| 56. இளங்கொடி கட்டல் | 65 |
| 57. சிலை நிறுவுதல் | 66 |
| 58. உலகவகை முதலியவை | 67 |
| 59. இலவயக் கேடு | 68 |
| 60. ஊடகக் கேடு | 70 |
| 61. பெற்றோர்மேல் ஆணையாக | |
| 62. பேசும் மொழிமேல் ஆணையாக | 72 |
| 63. பிறந்த மண்ணின்மேல் ஆணையாக | 73 |
| 64. நல்லரசின் கடமை | 74 |
| 65. நற்குடிகளின் கடமை | 75 |
| 66. ஒப்புரவு | 76 |
| 67. பொங்கல் விழா | 77 |
| 68. கூட்டுக் குடும்பம் | 78 |
| 69. வாழ்க | 80 |

# 1. வணக்கம்

வணக்கம் என்பது பழந்தமிழ்ச் சொல். "தாளை வணங்கல்" திருக்குறள். வணங்குதல் பணிவு, வளைவு, தணிவு ஆகிய பொருள்களில் வருவது. வில் வணக்கம்; சொல்வணக்கம் என்பவையும் வள்ளுவங்கள். "தலையே நீ வணங்காய்"என்பது அப்பரடிகள் வாக்கு.

ஒருவரைக் கண்டால் வணங்குதல் நட்பு, அன்பு, பணிவு என்பவற்றின் வெளிப்பாட்டுச் சான்றாம்.

மிகு பேரன்புடையாரைத் தழுவிக் கொள்ளுதலும் நம் வழக்கே. தழுவிக் கொள்ளுதல் 'தழீஇக் கோடல்' என்பவை தாய் சேய் உறவு வழிப்பட்ட வளர்நிலை.

கை குலுக்குதல், ஒற்றைக் கையைத் தூக்கி சல்யூட், சலாம் எனலோ, குட் மார்னிங்கு, குட் நூன், குட் நைட்டு என்று நல்லதும் பொழுதும் சொல்லுதலோ ஆங்கிலர் வழக்கு.

'நமற்காரம்' ஆரிய வழக்கு.

இப்படி அயலார் வழக்கு, பலவாய்ப் பெருகியதால் நம் பழைய வழக்காகிய **வணக்கம்** குறையவும் மறையவும் கூட ஆயது.

வாயொன்று கையொன்று தலையொன்று எனச் செயல்படாமல் ஒருமைப்பட்டது **நம் வழக்கமாகிய வணக்கம்.** அதில் உச்சிக்கு மேல் தூக்கல், தலைநேர் கூப்பல், மார்பளவு கூப்பல் என்பவை எல்லாம் தனிப்படுநிலைகள்!

மக்கள் வழக்கில் கும்பிடுதல், கும்பிடுகிறேன் என்பதும் பழமையானது. இன்றும் அருகி வழங்குகிறது. கூப்புதல் கைகூப்புதல் என்பனவும் அதுவே.

எண் சாண் கிடையாக வீழ்ந்து வணங்குதல் கோயில் வழக்கு. துறவர் வழக்கு! குற்றம் புரிந்தார் குறையைப் பொறுக்க வேண்டல் என்னும் வழக்கிலும் உண்டாயிற்று. ஊர்க்கூட்டம் கூட்டி ஊரவர் காலில் வீழ்ந்து மன்றாடுதல் அண்மைவரை இருந்ததே.

இதுகால், 'வணக்கம்', மீட்டெடுக்கப்படுகிறது. 'மாறவே மாட்டேன்' என்பவர் நமற்காரத்திலும், குட்மார்னிங்கு முதலியவற்றிலும் உளர்.

சமய நெறி அயல் நாட்டு நெறி எனக் காட்டினும், **வாழும் மண்ணின் பண்பாட்டுச் சிதைவு** என எண்ணினால் தீர்வுதானே உண்டாகும்.

இருகையும் கூப்ப ஒருகை காட்டுவாரும், அதிலும் இடக்கை காட்டுவாரும், தலையை அசைப்பாரும், பட்ட மரமாய்ப் பார்வை இல்லார் போல் இருப்பாரும் பண்பாட்டுக் கேடர்!

**மண்ணின் மணம் என்பது அம்மண்ணின் பண்பாட்டு மணமாம்.**

## 2. பெயர்

தமிழர் முகவரி தம் பெயர். ஒவ்வோர் இனத்தவர் சமயத்தவர் முகவரியும் பெயரே! ஆனால், தமிழன் முகவரியாம் பெயர் எப்படிக் கெட்டுக் குலைந்து பட்டுக் கிடக்கிறது! வெட்கத்திலும் வெட்கமானது! ஆனால், அப்பெயரிட்டவர்க்கும், பெயர் கொண்டவர்க்கும், நாகரிகத்தின் உச்சிக்கிளையில் நிற்கும் உவகை!

சோழன் குளமுற்றத்தான் ; பெருநற்கிள்ளி

பாண்டியன் நெடுஞ்செழியன் ; பூத பாண்டியன்

சேரன் செங்குட்டுவன் ; இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன்!

**பண்டை மூவேந்தர் பெயர்கள் இவை.** இடைக்காலத்தில்,

**இராசராச சோழன், இராசேந்திர சோழன், சௌந்தர பாண்டியன், சுந்தரபாண்டியன், குலசேகரன்** எனமாறின.

**மாமல்லன்** இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதியை ஆட்சி புரிந்தவன்; ஒன்பது பரம்பரை! பெயர், **ஆரியச்சக்கரவர்த்திகள்** எனப் பெற்றான். தமிழ்ம்மைப் பெயரா அது? **ஆரியத்தின் கொத்தடிமையாய் அரசர் போய்க் கெட்ட வரலாறு இது.**

இன்று **பெண்களின் பெயர்களில்**

கண்ணகி, மாதவி, மாதரி, கோப்பெருந்தேவி, நாகையார் பெயர் காண முடியுமா? ஷீலா, ரீலா, ச்யாமளா, சௌந்தர்யா - இன்னவை.

**ஆண்கள் பெயர்கள்**

ரமேஷ், ரமணி, ரத்தீசு, ரவி இவை முன்னறுப்பு பின்னறுப்பு என அறுக்கப்பட்ட **மோழை வடிவங்கள் - வடமொழிப் பெயர்கள்**

பரமேசுவரன், சுப்பிரமணியன், பிரகதீசுவரவன், திரவியம் இப்பெயர்களின் கூழை வடிவுகள் தாம் இவை!

சோதிடர் கெடுத்துக் கெடுத்து வரும் கேடுகளின் பயன் இது.

ஜ, ஜா, ஷ, ஷோ, ஹ இவையெல்லாம் சோதிடர் சுட்டிக் காட்டும் பெயர்களின் முன்னெழுத்துகள்!

'மணி', மோணி ஆவான் – ஏன், எண்கணிதம். மாணியும் ஆவான். அரசன், இராசா ஆக்கப்படுவான்.

முருகன், சுப்பிரமணியன் எனப்பட்டால் தான் சுவை! முகவரி இழந்த இனம் தமிழினம் மட்டுமே உலகத்தில்!

'ஞானசம்பந்தர்' தமிழ் ஞான சம்பந்தர் என்று பன்னூறு முறை சொன்னார் தம் பாடலில். அதனால், அவர் பெயரை ஆரியர் கொள்ளார். பிள்ளையார் விநாயகர், விக்னேஷ்வரர், கணபதி ஆவார். ஏன் முகவரியைக் கெடுக்க வேண்டும்? இது ஆரியச் சோதிடர் ஆரியப் போலிமையர் வேலை! அயல் மயக்கு அப்படிப் போதை ஆகிப் போனது! பேதையும் ஆக்கிவிட்டது.

# 3. முன்னெழுத்து

தந்தையார் பெயரை முன்னெழுத்தாகக் கொள்வது நெடுநாள் வழக்கம். பள்ளியில் சேர்க்கும் போதே பதிவாகியும் விடுகிறது. சிலர் தந்தை பெயருடன் தாய் பெயர் முன்னெழுத்தையும் தம் பெயருடன் இணைப்பதும் இக்கால வழக்காகி வருகிறது. இது பாராட்டத்தக்கதும் ஏற்கத் தக்கதுமாகும். ஊர்ப்பெயரை இணைத்தலும் இனியதே!

நம்மைப்போல் ஆங்கிலேயரோ பிற மொழியரோ முன்னெழுத்தாக வேறுமொழி எழுத்தை அமைத்துத் தம் பெயரைத் தாய்மொழியில் எழுதும் வழக்கம் உண்டா?

விசுவாசம். பரிசுத்தம் என வேற்று மொழிப் பெயர் கொண்டும் தனைத் தமிழில் எழுதுபவரும்

S. விசுவாசம். K. பரிசுத்தம் என எழுதக் காண்கிறோமே!

தமிழிலே பெயர் கொண்டவரும்

N. அண்ணாமலை. T. செல்லையா

என முன்னெழுத்தாக இட்டு எழுதுவதைக் காண்கிறோமே! இப்படி வேற்று மொழியார் தம் பெயரைத் தாய் மொழியிலும் முன்னெழுத்தை வேற்று மொழியிலும் எழுதுவது உண்டா? மொழியின் ஆக்கச் செயலா இது? அழிவுச் செயலா?

அறிவுடையவர் ஏற்கும் செயலா? மொழிக்கேடு மட்டுமல்லாமல் பண்பாட்டுக் கேடு மல்லவா.?

T. முன்னெழுத்து: தங்கையா, தாயப்பன், திருவேங்கடம், தீரன், துரை, தூயன், தென்னன், தேனப்பன் என எப்பெயராயினும் முன்னெழுத்து "T" என்னும் ஒன்றுதானே!

பாவலர் ம. இலெ. தங்கப்பா ஒரு வினா எழுப்புகிறார்!

"தன்பேர் தமிழாம் தலையெழுத் தாங்கிலமாம்

என்பேய் பிடித்தான் இவன்?"

இப்பேய் பிடித்தாட்டுபவன் தான், மறுமொழி இதற்குக் கூறவேண்டும்! ஆடுபவனுக்கும் பொறுப்பு உண்டு!

# 4. நம் எழுத்து

நம் எழுத்து தேர்ந்து தெளிந்து ஒலி வடிவு. வரிவடிவு என இரண்டையும் இயற்கை இயங்கியல் வழியே கொண்டது. அது உயிர். மெய். ஆய்தம் கொண்ட குறுங்கணக்கும் இவற்றொடு உயிர் மெய் கொண்ட நெடுங்கணக்கும் உள்ளவை. அகரமுதல் னகரம் இறுதியாக அமைந்தவை.

உயிர் வைப்பு முறையிலும், மெய் வைப்பு முறையிலும் சீரிய ஒழுங்கு கொண்டவை.

அவ்வொழுங்கு ஒலி முயற்சி, சொல்லமைதி, பிறப்பிடம் என்பவை பற்றியவை.

அ ஆ - ஓரினம். இ ஈ எ ஏ ஐ ஓரினம்: உ ஊ ஒ ஓ ஔ ஓரினம் என உயிர்களும். ஒலிமுறை முயற்சி ஆயவற்றால் அமைந்தவை.

கங, சஞ, டண. தந, பம, றன என்பவை, வல்லினம் மெல்லினம் என்னும் இனவைப்பு, சொல்லமைவு ஒலி நயம் கொண்டமைந்தவை. இடையினம் இடப்பிறப்பால் "யரலவழள" ஒலியமைவால் தொடர்புடையவை.

உயிர்க்கும் மெய்க்கும் கூறப்பட்டவை உயிர்மெய்க்கும் ஒக்கும். தனி நிலை என்பது எவ்வகையிலும் (வடிவு. ஒலியளவு. சேர்க்கை) மற்றையெழுத்து முறையொடும் ஒன்றாமையாம் தன்மையது - பக்கம், அச்சு, பத்து. அப்பா - வல்லொற்றையடுத்து அவ்வல்லொற்றே வந்தவை.

தங்கம், பஞ்சு. பந்து, அம்பு, வண்டி, நன்றி - மெல்லொற்றை யடுத்து அதன் வல்லினம் வந்தவை.

இயக்கமுடைய உயிரெழுத்தெல்லாம் வட்டம் (அ) சுழியில் தொடங்குவ சிலவுமாம். (ஞ, ண, ல, வ. ள, ன.) சுழி இருப்பினும் உயிரேறி இயக்காமல் இயங்காதவை.

இத்தகைய கட்டமைவுடைய எழுத்துகளின் கட்டமைப்பு ஒழுங்கை ஒழுங்கற்றவை என்றும், கருவிகளுக்கு ஏலாதவை என்றும் எழுத்துச் சீர் திருத்தப் பெயரால் எழுத்துச் சீரழிப்புச் செய்தல் பிறவிக்கடமையாகக் கொண்ட பிறவிகள் அறிவியல் காட்டி மருட்டுகின்றன! கருவியாளரோ

அவர்கள் அறிவுத்தடை அன்றிக் கருவித் தடை இல்லை என்பதை மெய்ப்பிக்கின்றனர்.

ஐ, ஔ வேண்டா. அய், அவ் போதும் என்பார் உளர். அவர், “நெட்டெழுத்தேழே ஓரெழுத் தொருமொழி” என்னும் அடிப்படை ஆணையையும் அறியாப் போலித்திருத்தர். இவ்வகைச் சிதைப்பும் நம் மொழிப்பண்பாட்டுச் சிதைவேயாம்.

## 5. நம் உரையாடல்

சிற்றூர் மக்களிடம், நல்ல வழக்குத் தமிழ் காலமெல்லாம் வளர்ந்து வந்தது. புலமையர் நடை வேறாயினும் சிற்றூரரார் வழக்கு நடையே அவர்களுக்கு மூலமுதலாக இருந்தது.

ஆரியம் வந்த பின் அது புகுத்திய சமற்கிருதச் சொல் புலமையரிடம் புகுந்தது. அது படிப்படியே சிற்றூரரார்க்கும் எட்டியது. இசுலாமியப் படையெடுப்பு, தெலுங்கு ஆட்சி, மராத்தியர் புகுகை என்பவை தொடர்ந்தன. இவற்றின் வழியாக உருதும் சமற்கிருதமும் சிற்றூர்ச்சார்ந்தன. ஆங்கிலர் ஆட்சி வந்தது ஆங்கிலம் பள்ளி வழியாகவும் ஆட்சி வழியாகவும் நீக்கமறப் பரவியது.

பிறந்த மண்ணின் மொழியொடு வடமொழியைச் செம்பாதி (சரிபாதி) கலந்த மணிப்பிரவாள நடையை நாலாயிரப் பனுவல் உரையர் வலிந்து புகுத்தினர். பிரயோகவிவேகம் முதலாம் இலக்கண நூல்களும் ஏற்றுப் புலமையரை மூளைச்சலவை செய்தது. படித்தவர் பேச்சில் உரையாடலில் பாதிக்குமேல் அயற்சொற் கலப்பு ஏற்பட்டது. சிற்றூரரார் படியார் வழக்கிலும் அக்கலப்பு கால்பங்கு அளவேனும் கலந்து விட்டது.

இத்தீமையை உணர்ந்த **மறைமலையடிகள்,** கால்டு வெலார் கருத்தை உணர்ந்தும், தம் கூர்த்த அறிவால் தெளிந்தும், **தனித்தமிழ் இயக்கம்** கண்டார். தம் நூல்களைத் தனித்தமிழில் எழுதினார். அவ்வுணர்வு ஏற்படு முன் இயற்றப் பட்ட நூல்களையும் மீள்பதிப்பில் கலப்பில்லாமல் வெளியிட்டார். அதன் மேல்வரிச் சட்டமாகப் **பாவாணர்** எழுத்து பேச்சு ஆயவற்றில் தனித்தமிழே கொண்டார். **பாவலரேறு** முதலாகப் பலர் தனித்தமிழ்த் தொண்டின் வயப்பட்டுப் பரப்பாளர்

ஆயினர். உலகத்தமிழ்க் கழகம் என்னும் உ.த.க. வின் கொள்கை விளக்கமாகவே தனித்தமிழை மீட்டெடுக்கவே தென் மொழி, முதன்மொழி குறள்நெறி இதழ்கள் கிளர்ந்தன. செந்தமிழ்ச் செல்வியும் தமிழ்ப் பொழிலும் தனித்தமிழ்க் காவலில் பங்கு கொண்டன. செந்தமிழ் இதழ் முதல் பத்து ஆண்டு வரை தமிழ்க் காப்பில் இருந்து, பின்னே மணிப்பிரவாள நடைக்குச் சென்று, மிகப் பின்னே தமிழ் நடையிடுகிறது. இப்பொழுது பல சிற்றிதழ்கள் - மாதிகைகள் - தனித்தமிழ்க் காவல் அரணங்களாக வளர்கின்றன. ஆங்கிலம் கற்றோரும் சமயப் பற்றோரும் தமிழைக் கெடுத்தலில் போட்டி போட்டு நிற்கின்றனர்.

"உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்"

என்பது பண்டை மொழி. தமிழை வடமொழியாக்கலில் ஆரியரும் ஆரிய அடிமையரும் தம் அழிப்பு வேலையே களிப்பு வேலை எனச் சிதைக்கின்றனர்.

மொழிக் கேட்டைப் புரிந்த பின்னராவது திருந்தக் கூடாதா எனின்,

"திருந்தவே மாட்டோம்; தீரா அழிவு செய்வதே எம்பிறவி நோக்கு"

என்பாரை என் செய்வது? "சொல்லப் பயன்படுவர் சான்றோர்" என்பது வள்ளுவம்!

# 6. நம் எண்

'எண்ணும் எழுத்தும் கண்'

என்பது பலரும் பகர்ந்தது; அறிந்ததும் அது.

எண் ஆகிய கண்ணும் எழுத்தாகிய கண்ணும் தெரியாதவர் கண், புண் என்றும், இவ்விரண்டையும் கற்றோர் காக்க வேண்டும் என்றும் காவாதவர் கண்கெட்டவர் என்றும் விரித்துப் பலர் கூறியுள்ளர்.

பண்டைத் தமிழர் வணிகப் பொதுமைக்கு 1,2,3,4,5 எனவரும் எண்ணைக் கொண்டனர். பள்ளிப் படிப்புக்கும் தமிழக வாழ்வியலுக்கும் தக, ஒன்று இரண்டு முதலியவற்றைத் தமிழ் எழுத்தைக் கொண்டே படைத்திருந்தனர்.

| | |
|---|---|
| 1 | |
| 2 | உ |
| 3 | ௩ |
| 4 | ச |
| 5 | ரு |
| 6 | சா |
| | எ |
| 8 | அ |
| 9 | கூ |
| 10 | ய |

என அழைத்தனர். கி.பி. 1950 வரைக்கும் கூட அச்சுப்புத்தகங்களிலும் எழுத்து முரிகளிலும் கடைக் கணக்குகளிலும், இவ்வெண்கள் இருந்தன. இவ்வெழுத்து எண்கள் கொண்டே பள்ளியில் பாடம் நடத்தப்பட்டது. கணக்கதிகாரம், கணிதவியல் என வெளிப்பட்ட நூல்களும் இவற்றைக் கொண்டே இயன்றன.

பத்து என்பதை க0 என்று கொள்ளும் வழக்கு பின்னே ஏற்பட்டது.

ள - இது நூறு

நெ - இது ஆயிரம்

என வழக்கில் இருந்தன.

இ - அரை

வ - கால்

லு - அரைக்கால்

ஞ - முக்கால்

என்பனவும் இருந்தன. தத்தம் எண்ணை மற்றை மொழியார் இன்றும் விடாமல் காத்துக் கொண்டும் வழக்கில் பயன்படுத்திக் கொண்டும் இருக்கிறார்களே! இதனைக் கைவிட்ட நாம், இழப்பு வேலை தானே செய்தோம். ஆர்வ முடையவர்கள் நாட்காட்டியின் வழியே மீட்டெடுப்புச் செய்கின்றனரே! அவர்கள் செயலைப் பாராட்டி நாம் பின்பற்ற வேண்டாவா? நம் எண்ணை மீட்டெடுக்க வேண்டாவா?

# 7. இன அழிப்பு

இனப்பற்று என்பது சாதி அன்று; சமயம் அன்று; கட்சி அன்று; நிறம் அன்று; நிலமும் அன்று. மொழியே - அவரவர் தாய் மொழியே இனத்தைத் தீர்மானிக்கும் அளவு கோலாம்.

மற்றவை பிறப்பொடு வந்தனவும் இல்லை; இறப்புவரை இருப்பனவும் இல்லை. தாய்மொழி ஒன்றே பிறப்பொடு வந்து இறக்கும் வரை தொடர்வது. தாய்மொழிப்பற்று. உள்ளமை இனப்பற்றுச் சான்று. அது வாயில் இல்லை! நெஞ்சில் உள்ளது! செயலில் உறுதிப்படுவது!

ஆரியர் எங்கிருந்தாலும் தம் இன வழக்கை - கூட்டை - மொழியை - விட்டுத் தருகின்றனரா?

ஏன் பழந்தமிழ் மண்ணாக இருந்து தமிழர் பேதைமையால் கேரளம், கன்னடம், ஆந்திரம் எனப்பிரிந்த இனத்தைப் பார்த்தாவது, தமிழினம் தன்னை உணரக் கூடாதா?

ஒரு மலையாளி ஒன்பது மலையாளியைக் கடையில், தொழிற்சாலையில், அலுவலகத்தில் சேர்த்து விடுகிறானே!

தன்னவனைக் கண்டால் மலையாளத்தில் தானே பேசுகிறான்!

ஓர் இந்திக் காரன், ஒரு வங்காளி, ஒரு சீக்கியன் எப்படி இருக்கிறான்! இருக்கும் இடத்தில் இனத்தை வளர்ப்பிடம் ஆக்கி விடுகிறானா இல்லையா? சீனன் எங்கிருந்தாலும் சீனனாகவும், இசுரேலியன் இசுரேலியனாகவும், இசுலாமியன் இசுலாமியனாகவும் தானே இருக்கிறான்.

சுற்றிப் பார்க்கும் ஆந்தைப் பார்வை, ஊடுநின்று இருபக்கமும் காணும் காகப்பார்வை, வண்டியில் பூட்டப்பட்ட குதிரைப் பார்வை (நேரே மட்டும் பார்க்கும் பார்வை) என்பவை கூட இல்லாத தமிழ்ப் பிறவி, என்ன பிறவியோ?

காசுமீரில் பிறந்தவன் - வாழ்பவன் - இந்தியனா, காசுமீரியனா? கேட்டால் புலப்படும்! இந்திய அரசின் எக்குடியும் அங்குக் கையகல மண்ணை உரிமையாகக் கொள்ள முடியாது! ஏன்? இனக்காவல் - மண் காவல் - தற்காவல்!

தமிழினம் போல மானம் பேசி மானம் கெட்டு வாழும் இனம், 'உலகில் அது ஒன்றாகவே இருத்தல்' ஒரு பெருமை எனக் கொண்டு விட்டது போலும்!

'இனத்தவனை அழிக்கும் இனத்தவன்' என விருது தந்தால், அதில் ஒரே ஒருவனாக இருந்து பெறுபவன் தமிழகத் தமிழனாகவே இருப்பான்!

## 8. உடுப்பு

ஓர் இனத்தின் அடையாளம் உடுப்பு, தலைக் கோலம் முதலியன. தமிழன் உடை வேட்டி; தார்ப்பாச்சை; மடித்துக் கட்டும் தற்றுடை; சுற்றி நின்று கால் அடி வரை சூழும் உடை ; போர்க்கு வட்டுடை ; உழவன் கச்சை என்பவை பண்டை அடையாளங்கள்.

கால இட பணி நிலைகளால் பல நாட்டுக் கலப்பு, போக்குவரத்து ஆயவற்றால் மாறினும் தன் அடையாளத்தைக் காட்ட வேண்டும் எனப்பிற நாடுகளில் வாழும் தமிழர் பொதுக்கூட்டம் - குடும்ப விழா -திருமணப் பொதுவிழா, பொங்கல் விழா ஆயவற்றில் தம் உடையை மறவாமல் உடுத்து அடையாளம் காட்டுகின்றனர். மகளிரும் அதனைப் போற்றுகின்றனர்.

ஆனால் தமிழகத்தின் நிலை என்ன?

வேட்டி கட்டுபவன் – பட்டிக்காட்டான்; நாட்டுப் புறத்தான்; கருநாடகம்; கற்றறியான் எனப்பட்டங்கள்!

உடுப்பு, இடுப்புக் கட்டு, சட்டை, மேல் துண்டு, தலைப்பாகை என்பவை இல்லை என்றாலும் வேட்டி, சீலை, சட்டை ஆயவற்றையாவது போற்றி அடையாளம் காட்டக் கூடாதா?

மலையகம் போகும் போதும் பிறநாடுகள் போகும் போதும் மறவாமல் யான் வேட்டியோடு போகிறேன். சுற்றுமுற்றும் எவரும் வேட்டியராய் என் கண்ணில் படவில்லை. தமிழர்களைத்தான் சொல்கிறேன்! என்னை வர வேற்க வந்தவர், வேட்டி சட்டை துண்டுடன் நிற்கின்றனர்! வேறு அடையாளம் தேடாமல் என்னைக் கண்டு கொள்கின்றனர்; அவர்களை நான் காண்கிறேன்.

வெளிநாட்டுத் தமிழர், 'ஊரில்' இருந்து வந்துள்ளார்கள்; தாயகத்தில் இருந்து வந்துள்ளார்கள் என்கின்றனர். அவற்றின் அடையாளம் நம்மிடம் உண்டா? வழிகாட்டல் உண்டா?

அவர்களைக் கண்டேனும் படித்துக் கொள்ளக் கூடாதா? சென்னையிலேயே ஓர் உணவகம்; "வேட்டி கட்டியவர் உள்ளே நுழையக் கூடாது" என்பது விதியாம்! இலண்டனிலே பிறந்து தேம்சு ஆற்றிலே நீராடியவன் கூட இந்த மண்ணுக்குத்தக உடுத்து வாழ்ந்தது வரலாறு! தமிழ்ப் பண்பாட்டைக் கெடுத்துவாழும் 'பெருவாழ்வர்' வாழ்வு இது!

## 9. வரிசை கெடல்

வரிசை கெடல் என்பது பலவகை. இங்கே நாம் கொண்டது நிற்கும் வரிசை, செல்லும் வரிசை என்பதே.

**'எறும்புச் சாரி முறை'** என்பது பண்டே தமிழ் மண் கண்டது. 'கியூ' என்னும் ஆங்கிலேயர் வழக்கை மொழி பெயர்த்ததாகக் கொள்கின்றனர்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்பான், சிறுகுடிகிழான் பண்ணன் என்பானைப் பாணாற்றுப் படையாகப் பாடிய பாடல் புறநானூற்றில் உண்டு. அதில் பண்ணன் மனையில் வழங்கிய உணவுக் கலங்களைச் சிறுவர்கள் எடுத்துக் கொண்டு செல்லும் முறையை,

"சிறுநுண் எறும்பின் **சில்லொழுக்கு ஏய்ப்ப**"

என உவமைப் படுத்துகிறான்.

எறும்புகள் வரிசையாகச் செல்வது போல - உணவைக் கொண்டு அல்லது தம் முட்டையைக் கொண்டு செல்வது போல - சிறுவர்கள் உணவுக் கலங்களை ஏந்தி வரிசையாகச் செல்கின்றனர் என்பது இதன் பொருள்.

இதனை அறிந்தோர் 'கியூ' திட்டத்திற்கு எறும்புச்சாரி முறை எனக் கலைச் சொல் தந்தனர். ஆனால், பழ வழக்கு என்றேனும், ஆங்கில முறை என்றேனும் நடைமுறையில் கொண்டது உண்டா?

தொடர்வண்டி, பேருந்து, கோயில் வழிபாடு, மருந்துக்கடை, நியாய விலைக்கடை, இலவசக் கொடை என எவற்றிலேனும் இம்முறை உண்டா? மிதிபட்டுச் சாவார் உண்டெனின் வரிசைக் கேடு தானே அது! அதிலும் தொழுகை - வழிபாடு - செய்யும் இடங்களில் மிதிபட்டுச் செத்தால் அந்த நிலை கடவுள் ஏற்கும் நிலையா? மாந்த நேய நிலையா?

பள்ளி வண்டியில் ஏறும் மாணவ மாணவியர் வரிசையாக நின்று வண்டியில் ஏறுகின்றனரா?

மாந்த நேயச் சீர் கேடா, அவ்வத் துறை ஆளுமைச் சீர் கேடா, அரசுச் சீர் கேடா – இல்லை எல்லாச் சீர் கேடுகளுமா?

வண்டியில் இருந்து இறங்க விடாமல் ஏறி இடம் பிடிக்கும் முரட்டுப் பிறவிகளை, வண்டி நடத்துநர் – காவல் துறையர் – கட்டுப்படுத்தவில்லை என்றால், அவர்களை நடவடிக்கை எடாத் துறைத்தலைமையின் கேடும் கூடியது தானே!

முதியர், மாற்றுத் திறனாளர், மகளிர், ஆண்கள் என எழுதிப்போட்டுப் பயன் என்ன? "குடி வீட்டையும் கெடுக்கும், நாட்டையும் கெடுக்கும்" என எழுதிப் போட்டு மதுக்கடைகளைத் திறக்கும் அரசின் கயமை, நாட்டை எப்படி வரிசைப்படுத்தும்?

## 10. இசைமேடை

தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்ட **தியாகராசர்,** தெலுங்கில் தமிழிசை பாடினார்.

**சாமாசாத்திரிகள்** போன்றோர் வடமொழி வாணர். அவர் மொழியில் பாடினர்.

தமிழனாகப் பிறந்தவனுக்கு ஏன் தன்னறிவு இல்லாத் தடித்தனம்? தெலுங்கிசை – வடமொழி இசை – கருநாடக இசைப் பெயர்!

கேட்பவர் தெலுங்கரா? வடவரா?

தமிழர்! அவர் செவி தோற்செவியா? இரும்புச் செவியா? பாடுபவருக்குப் பொருள் புரியுமா?

கேட்பவருக்குப் புரியுமா?

**'இசைக்கு மொழி இல்லை'** என்கிறாயே! ஏன் வாயைத் திறக்கிறாய்? குழல்யாழ் மத்தளம் போதுமே! தமிழுக்கு மட்டும் தான் மொழி இல்லையா? செய்ந்நன்றி கொன்ற பாவப் பிறவி நீ! இந்த மண்ணின் சோற்றை உண்டு, இந்த மண்ணின் வாழ்வு கொண்டு, இந்த மண்ணோர் உழைப்பால் வாழும் நீ, இம்மண்ணுக்குச் செய்யும் நன்றி கொன்ற செயல்! உன் இனத்துக் கெனக் கோயில் கட்டு! உன்பாட்டைப் பாடு! மேடையேறு!

தமிழ்ப் பாட்டுப்பாடாத நீ மேடையில் ஏறாதே! கீழே இறங்கு! "உன் மூட்டையைக் கட்டு" என்று பொது மக்கள் கிளர்ந்தால் அன்றி, ஏமாற்றுக் காரன் திருந்தான்!

ஏமாளியாக இருப்பவன் எண்ணான்! எண்ணவும் விடான்! அவனுக்குக் காவல், அறங்காவல்துறை என்னும் அவலத் துறை! தமிழன் தமிழனாக இல்லாச் சான்று, இசைத் துறையை அயன் மொழிக்கு விட்டு விட்ட அவலம்!

# 11. கூத்து

கூத்து, பெருங்கூத்து.

கூத்தரசன் செய்யும் மாறாக்கூத்துப் போன்ற கூத்து.

தமிழ் முத்தமிழாம்

இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழாம்! முத்தமிழ் போல எம்மொழி பெயர் கொண்டது? முத்தமிழ்க் காவியச் சிலம்பு போல் எம்மொழி கொண்டது? 108 கரணங்கள் (நாட்டிய நளிநயங்கள்) ஒன்பான் மெய்ப்பாடுகள் வட நாட்டில் ஓரிடத்தேனும் உண்டா?

தமிழகத்தில் 5 கோயில்களில் உண்டே!

இங்கே இல்லையாம் கூத்து! இதுவே கூத்தன் கூத்துத்தான்! தொல்காப்பிய மெய்ப்பாட்டை - சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் காட்டும் நளிநயங்களை, அவிநயம் என்னும் அழிந்து போன நூலைக் கேட்பவர், வடவர் கூத்தெனக் கூத்தாடினாலும், கழைக் கூத்தாடியாகக் கொள்வாரே அல்லாமல் கலைக் கூத்தாடி ஆக மாட்டார்! கழைக் கூத்தாடியர் உயிரைப் பணயம் வைத்த கலைவல்லார் அல்லவா!

இறைவனையே கூத்தரசனாக வழிபட்ட மண் இம்மண்! பதினோராடல் பதிவுற்ற மண்! கூத்து வடமொழி வழியதாம். கேழ்வரகில் நெய்வழிந்ததாம்!

ஊமையன் முன் உளறுவாயன் கெட்டிக்காரன். தமிழன் ஊமைச் செவிடச் சூத்திரனாய் - தமிழ ஆரியப் போலிகள் தடித்தன உதவியராய் அமையத், தமிழ்க் கூத்துக்கு முற்பட்டது, பரதம் எனப்பட்டது! பரதவர் நாடு, பரத நாடு; நாவலம் தேயம்! அது பரதமுனிவரால் வந்த தென்றதும், சகுந்தலை மகன் பரதன் பெயர் கொண்ட தென்றதும் பிற்காலப் புனைவு.

"பரதவர் மலிந்த பயங்கெழு மாநகர்" என்பது முன்னைக்கு முன்னை வரலாறு.

## 12. ஊர்ப் பெயர், ஆற்றுப் பெயர் முதலியவை

காரணம் கருதி மலை ஆறு ஊர் முதலியவற்றுக்குப் பெயரிட்டனர், இயற்கையோடு ஒன்றிய தமிழர்!

மரம் செடி கொடி முதலியவற்றிற்குப் பொருளமைந்த பெயர்கள் இட்டது போல், மலை ஆறு ஊர் முதலியவற்றுக்கும் பெயரிட்டனர். அப்பெயரை மாற்றுவானேன்?

தமிழ் என்பதை அவரவர் மொழிக்குத்தக தமிழி, தாமிழி, தமில், தாமில் என வழங்கினர்.

பாண்டியனைப் பண்டியா, பாண்டியா, பாண்டா எனப் பிறமொழியர் வழங்கினர். மதுரையை, மத்ரா, மொதுரா, மொத்ரா என்றனர். திருநெல்வேலி, திருவல்லிக்கேணி என்பவற்றைத் தின்னவேலி, திருப்ளிகேன் என்றனர். ஆனால் வேறாக ஒலித்தாலும் அதன் அடிப்பெயரை மாற்றவில்லை! ஆய்வாளர் கண்டு கொள்ள முடிந்தது.

ஆனால், வேதியர் என்ன செய்தனர்? பேரை அறியா வண்ணம் சிதைத்தனர்.

திரு மரை(மறை)க் காட்டை 'வேதாரண்யம்' என்றனர். பழமலையை அல்லது முதுகுன்றை 'விருத்தாசலம்' ஆக்கினர்.

மயிலாடுதுறையை, 'மாயூரம்' 'மாயவரம்' ஆக்கினர். திரு ஆடானையை 'அசகசபுரம்' என்றனர். கடவுள் பெயர்களையும் விடவில்லை!

சொக்கர், 'சோம சுந்தரர்' ஆனார்!
பெருவுடையார், 'பிரக தீசுவரர்' ஆனார்!
அண்ணாமலையார், 'அருணாசலேசுவரர்' ஆனார்!
இன்னும் சிலம்பாற்றை, 'நூபுர கங்கை' என்றனர்.

ஆர்க்காட்டை 'ஆற்காடு' ஆக்கினர், ஏன்?

'உலகமயமாக்கல்' இன்று நடைபெறுகிறதென்றால், 'ஆரிய மயமாக்கல்' கேடு அது.

வில்லுக்கு விதுரன் விசயன்தானாம்!

**வல்வில் ஓரி** என்னும் மாவீரன் இல்லையாம்!

வள்ளல் என்றால் கன்னனாம்!

**பாரி, ஓரி, குமணன் இல்லையாம்!**

சொல்லுக்கு அரிச்சந்திரனாம்!

**பொய்யா மொழி இல்லையாம்!**

இவையெல்லாம் என்ன, வேதிய மாக்கல் தானே! ஆக்கினவர் வரலாற்றை மறைக்க - மாற்ற - கெடுக்க - தம்மை முற்படுத்தத் தந்நலத்தால் கூறியது. எனின் அதனைத் தாங்கிப் பிடித்தவர் தமிழ்ப் புலமைக் கேடர்கள் தாமே! அவரால் தானே பொதுமக்களும் கெட்டுத் தொலைந்தனர்.

## 13. பல்லி சாத்திரம்

'பல்லி கூறும் பலன்' எனச் சிறு சுவடி.

பல்லி ஒலி கேட்கும் இடத்தைக் கொண்டும், பல்லி தம் உடலில் விழும் இடத்தைக் கொண்டும் தீர்மானிக்கும் தீர்மானமே பல்லி சாத்திரமாம்.

"வாய்கொழுத்த பல்லி காடிப் பானைக்குள் விழுந்ததாம்" என்பது பழமொழி. வாய்க்கு வந்தவாறு பேசித்திரிபவன் ஒருவனிடம் வாங்கிக் கட்டிக் கொண்டதைப் பழிப்பது அது. பல்லிக்கு ஆறறிவு உண்டா?

ஆறறிவு உடையவன் இயல் செயலைத் தீர்மானிக்க வல்ல முக்காலம் உணரவல்ல அறிவுடையதா பல்லி? அதன் ஒலியும் வீழலும் "உனக்கு நல்லது நேரும்; கெட்டது நேரும்" என்று சொல்வதாக எண்ணி நடப்பவன் - சொல்பவன் - கேட்பவன் தன்னறிவு உடையவன் தானே?

பல்லி ஒலியைக் கேட்டு எதிர்காலக் குறி கூறுவதாக எண்ணும் எண்ணம் பண்டே உண்டு!

"பல்லியும் பாடு இசைத்தது"

என்பது சான்று.

அன்றியும் பல்லி சொல் கேட்டுப் பன்றி தன்பெட்டை குட்டிகளுடன் உலாச்சென்ற செய்தியும் பண்டே உண்டு.

பழமை எல்லாம் நல்லவையும் அல்ல! புதுமை எல்லாம் கெட்டவையும் அல்ல! **அறிவுக்கும் நலத்துக்கும் பொதுவுக்கும் ஆக்கம் செய்வன எவை எனினும் ஏற்கத் தக்கனவேயாம்.**

**மூட நம்பிக்கை என்பது** எவரிடம் எங்கு இருந்தாலும் மூடத்தனமே! தெளிவு எங்கு எவரிடம் இருந்தாலும் தெளிவே. அறிவும் நம்பிக்கையும் உடைய எவரும் பல்லி சொல் மட்டுமன்று, **தொடுகுறி, எண்குறி, கிளிசோதிடம், சகுனம், உருவிலி (அசரீரி)** கொண்டு செயல்படார்! நல்ல நேரம் கெட்ட நேரம் எண்ணார். இது பொதுக் குறிப்பு. பல குறிப்புகளுக்கும் தகுவது.

## 14. மேல் நோக்கு - கீழ் நோக்கு நாள்

நாட்காட்டியில் பார்த்தால் மேல் நோக்கு நாள் (↑) கீழ்நோக்கு நாள் (↓) எனக் குறியீடுகளைக் காணலாம். என்ன ஆண்டு, என்ன மாதம், என்ன கிழமை என்பவை மட்டும் உள்ள நாட்காட்டியை மட்டும் காணல் அரிது.

இவற்றுடன் நல்ல நேரம் கெட்ட நேரம், அமுத யோகம், சித்த யோகம், இராகு, எமகண்டம், குளிகை சூலம் பரிகாரம் கரணம் சந்திராட்டமம் இராசிபலன் என்பவை எல்லாம் இருக்கும் நாட்காட்டியில்! 'பஞ்சாங்க'த்தையோ சொல்லவேண்டா!

31.08.2012 நல்ல நேரம் 9.15 - 10.15 காலை

4.45 - 5.45 மாலை

இந்த இரண்டு மணி நேரமே நல்ல நேரம் என்றால், மற்றை இருபத்திரண்டு மணிநேரமும் கெட்ட நேரமா? 22 மணி நேரம் கெட்டதாக இருக்கும் நாள் மேல் நோக்கு நாள் ஆகுமா?

1.9.2012 சனி கீழ்நோக்கு நாளாம்.

கீழ்நோக்கு நாளில் நல்ல நேரம் 7.45 - 8.45 காலை

4.45 - 5.45 மாலை

கீழ்நோக்கு நாளிலும் மேல் நோக்கு நாளிலும் இரண்டு இரண்டு மணி நேரம் கெட்ட நேரம் நல்ல நேரம் உண்டாம்!

இவற்றை முன் வைத்து முயற்சியாளன் செயல்பட்டால் முயற்சியில் முன்னேற்றம் காண்பானா? இவற்றைப் பார்த்தா, அயல் நாட்டான் கண்டு பிடித்த மிதி வண்டி முதல் வானூர்தி வரை இயக்குகிறோம்? இல்லை! இவற்றைக் கண்டு எழுதுபவன் சோதிடம் குறி எனச் சொல்பவன், கடிகையாரத்தைக் கண்டு பிடித்தானா? மிதி வண்டி முதல் வானூர்தி கண்டு பிடித்தானா?

மேல்நோக்கு நாள், கீழ் நோக்கு நாள் பார்த்து விதைத்தால் விதைத்த தெல்லாம் முளைக்குமாம்! விளையுமாம்! வேளாண்மை முதல் வேலைகளைக் கெடுக்கவே தோன்றிய கெடு காலக் குறிப்புகள் அல்லவா இவை?

## 15. கோள்வலம்

தன் ஒளியுடைய கதிரவன், நாள் மீன். நாள்மீனின் ஒளியை வாங்கி ஒளிவிடுவது கோள்மீன். கோள் - கொள்ளுதல். கொடுப்பது நாள்; கொள்வது கோள். திங்கள் செவ்வாய் முதலியவை கோள்கள்! முழு முதல் இறை மட்டுமே இலங்கமாக (இலிங்கம்) வழிபட்டது நெடு பலகாலம்.! சித்தர் ஒடுக்கங்களையும் சிவலிங்கங்களாக அமைத்து வழிபட்டனர்.

'சித்தன் வேறு சிவன் வேறு இல்லை' என்பது பழமொழி, **திருமந்திரம்! திருவாசகம்!**

சித்தமலம் அற்றவர் சித்தர்.

சித்தமலம் அறுவித்துச் சிவமாகியவர் அவர் இலங்கம் (இலிங்கம்) கதிரொளி கடலில் எழும் தோற்ற வடிவில் அமைக்கப்பட்டது.

'எல்லே இலக்கம்' என்பது **தொல்காப்பியம்.** எல் - கதிரோன்; பேரொளி. எல்லங்காடி, அல்லங்காடி, என்பவை **சிலம்பில்** அறிவன. காலைக் கடை, மாலைக் கடை என்பவை மக்கள் வழக்கு.

சிவலிங்க வழிபாடு, அம்மையுடனும் மக்கள் மாமன் மருகன் என்று குடும்பமாகியது. படைவைத்து (வேல் வைத்து) வழிபட்ட **படை வீடு** வேலன் வழிபாடு ஆகியது. வள்ளியும் தேவ சேனையும் புகுந்தனர். பின்னர் ஒன்பான் கோள்கள் (நவகிரகம்) கோயிலுள் இடம் கொண்டன. ஐயப்பன் கோயிலில் குடியேற்றப் பட்டான். காஞ்சியாரையும் கோயிலுள் வைக்க முயற்சி மேற் கொள்ளப்பட்டது. ஏன் இத்தனை தெய்வங்கள் கோயிலுள்! பார்ப்பன இனம் வாழ்வதற்குக் கரவு வழியால் செய்து வருவன இவை! ஓதுவாரை ஒழிக்க - வாரப்பாடல் வரிப்பாடல்களை ஒழிக்க - வடமொழி அருச்சனை பெருக்க, அடித்தளம் அமைத்துக் கொண்ட முறையே இது. மூலமுதலை இருளில் தள்ளி, பரிவாரங்களைப் பளிச்சிட வைக்கும் வழிப்பறி இல்லாமல் தானே வரவைக்கும் கொள்ளை! தமிழனுக்குத்தான் தன்னறிவு இல்லையே!

## 16. கிரகணம்

திருமணத்தை வடவர் பாணிக்கிரகணம் என்பர். பாணி-கை; கிரகணம் -பற்றல். 'கைத்தலம் பற்றல்' என்பது அது (திருப்பாவை).

கையைப் பிடித்த சொல் கதிரோனையும் திங்களையும் பிடித்தது. அது 'சூரியகிரகணம்'; 'சந்திர கிரகணம்' எனப் புனையப்பட்டன.

இரண்டும் கையைப் பற்றித் தழுவிக் கொள்வனவா? கொண்டால், இக்கயிறு திரித்தவனும் கதை விட்டவனும் தப்புவானா? உலகம் இருக்குமா?

நிழல் படிவுகளே கிரகணம்! இது பொய்ப்புனைவுரை என்பதால் 'திங்களைப் பாம்பு கொண்டற்று' என்று பொய்ப்பரப்பலை (அலறை) விளக்கினார் திருவள்ளுவர்.

செம்பாம்பு பற்றுதல், கரும்பாம்பு பற்றுதல் (கேது, இராகு) எனப்பட்டன. நிழல் பரவி மறைத்தல் பாம்புப் படம் விரிதல் போல்வதாகலின் அந்நிழல் பரவுதலைக் கிரகணம் ஆக்கினர்!

'பாம்பு என்றால் படையும் நடுங்கும்' என்பது பழமொழி. வானில் பாம்பு பற்றுதல் மண்ணுக்கு நோயாம் - கேடாம்! அதற்குப் பரிகாரம் செய்ய வேண்டுமாம்! இல்லாவிட்டால் தீமையாம்! தந்திரக் கொள்ளைகளுள் ஈதொன்று!

அறிவியல் அறிஞன் எனப்பட்டம் பெற்றவனும் இதை நம்புகிறான்: பரிகாரம் செய்கிறான் என்றால், என்ன பொருள்? அவன் கற்ற அறிவியலை மூட்டை கட்டி வைத்து விட்டு. மூடத்தைப் பரப்பத் துணையாகிக் கண் மூடித்தனத்தால் தர்ப்பணம் செய்து பிழைக்கும் வேதியத்திற்குத் துணை நிற்றற்கேயாம்! உலகம் எக்கேடு கெட்டாலும் எவ்வினம் எக்கேடு கெட்டாலும் வேதியம் வாழ வேண்டும்! வேதியர் வாழ வேண்டும் என்பதற்கான கட்டுக் கோப்பான ஏற்பாடு இஃதாம்.

## 17. பலியிடல்

பலியிடல் பண்டு தொட்டே உண்டு.

"உயிர்ப்பலி உண்ட மயிர்க்கண் முரசம்"

உயிர்ப்பலி இல்லையா?

அவி சொரிந்து ஆயிரம் வேட்டல் (வேள்வி செய்தல்). அருளாளர் அந்தணர் வழக்கத்திற்கு அடுக்குமா?

நரபலி இடும் கொடுமை நெஞ்சம் நெகிழ்ந்து நடுங்க வைப்ப தல்லவோ?

இறைவன் பெயரால் எனினும், இறந்த உயிர் எழுமா?

"வாழும் உயிரை வாங்கி விடல்-மண்ணில்
எவர்க்கும் எளிதாகும்
வீழும் உடலை எழுப்புதலோ - ஒரு
வேந்தன் நினைக்கினும் கூடாதையா!"

என்பது **கவிமணி** வாக்கு: **ஆசியசோதி.**

பசுப்பலி, குதிரைப்பலி, எருமைப்பலி, ஆட்டுப்பலி, கோழிப்பலி என்பவை பழியல்லவா?

பண்டையோர் கொண்டால் என்ன?

தூக்குத் தண்டனையே கூடாது என்னும் நாளில் வேள்வி முதலாம் பலிகள் வேண்டுமா?

நம்மைப் பலியிடப் போவதாக நான்கு நாள்களுக்கு முன்னரே தெரிந்தால் அந்த நான்கு நாள் வாழ்வும் செத்துச் செத்துப் பிழைத்தல் தானே!

புலை கொலை தவிர்க்கும் சமயங்களும், கொள்கை கெட்டு மாந்தக் கொலையை மார்தட்டிச் செய்கின்றனவே! மாந்தன் விலங்காகி விட்டான் அல்லவா! எல்லா விலங்குகளுமா கொலை புலை விலங்குகள்? இல்லையே! அப்படியானால் மாந்தன் விலங்கினும் மேம்பட்டவனா?

'குழவிபலி' என்பது குழந்தைக்கு உணவுதருதல். அதனைக் குழவிப்பலியாக்கிவிட்ட சண்டாளர்கள் இல்லையா?

பூப்பலி, ஊண்பலி, நீர்ப்பலி என்பன அல்லவோ திருக்கோயில் பலிகள்!

பலிபீடம் அதற்காகத் தானே கட்டப்பட்டன. ஒரே நாளில் ஒரு கோயிலில் 400 எருமைப்பலியிடல் என்றால் கொள்ளி வாய்ப் பேய்களாக மாந்தர்கள் ஆகிய சான்று அல்லவா! பலியிடல் அருளாளர் பார்வையில் அறவர் நோக்கில் பெரும் பண்பாட்டுச் சிதைவாம்.

சன்மார்க்கக் கோயிலுள், "கொலை புலை தவிர்ந்தோர் புகுக"

என்பது முகப்பு எழுத்து! வடலூர் அருளாளர் எழுத்து!

## 18. கடாவெட்டு, எருமைப்பலி

பலியிடல் தொடர்ச்சியே இது.

தடவித் தடவி வளர்ப்பான். உயரிய அன்பைப் பொழிவான். நல்ல தீன் குடிப்பு வழங்குவான்! கொழுக்க வைப்பான் ஆட்டை- கடாவை! அருள் உள்ளத்தாலா? ஆன்ம நேயத்தாலா?

வாடிய பயிரைக் கண்டு வாடிய வள்ளலாராக,

ஆடிய முல்லையைக் கண்டு தேரைவிட்ட பாரியாக,

நடுங்குவதாய் எண்ணிப் போர்வையை மயிலுக்குப் போர்த்திய பேகனாக,

மேய்ப்பராகத் தம்மைக் கூறிய கிறித்து பெருமானாக,

நொண்டியாட்டைச் சுமந்த புத்தராக

அவன் அருள்மாரி பொழிபவனாகி விட்டானா?

புலவுக் கடையான் கூடுதல் விலை வழங்குதற்காக ஊட்டி, ஊட்டி, தடவித்தடவி வளர்க்கிறான்! இது ஒரு பக்கம்!

இறைவனே உயிரைக் கொடுக்கிறான் என்னும் நம்பிக்கை உடையவன், இறைவனுக்கு நேர்த்திக் கடன் என்னும் பேரால் கடாவெட்டு நடத்துகிறான்! தொங்கல் இல்லாமல் மாட்டை வெட்ட வேண்டுமானால் எத்தகைய கொழுத்தவனால், கருங்கல்லினும் வல்லிரும்பினும் வன்னெஞ்சனாக அவன் இருக்க வேண்டும்?

உயிரைக் கொடுத்தவனுக்கு நேர்ந்து கொண்டு, மயிரைக் கொடுக்கும் மொட்டை ஒரு பால்! கடாவெட்டு எருமைப்பலி ஒருபால்! பின்னதை நோக்க முன்னது பொறுக்கத் தக்கது. மீண்டும் முளைத்து வளர்ந்து விடுமே!

பெற்றோர் இறுதிக் கடனுக்கு (கருமாதிச் சடங்காக) மொட்டையடித்தல் வழக்கு! இழப்புக்கு ஆட்பட்டவர் அடையாளக் குறியாக அமைந்து அறியாரும் துக்கம் கேட்க உதவியது. வாழும் போது வாய்க்கு வேண்டும் உணவு தராதவன் கூட, வாய்க்கரிசி மட்டும் தவறாமல் போடுவான்

ஊருக்காக! உயிரைத் தந்த பெற்றோர்க்கு உயிர் உள்ளவரை வேண்டும் கடமை புரியாத கொடியனும் இறந்த போது மொட்டை போட்டு அடையாளம் காட்டுவான்.

பிராமணன் கொலை செய்தால் தண்டனை என்ன?

மனு (அ) தருமம் சொல்வது, ஒரு மயிரைப் பறித்துவிட்டு ஊரைவிட்டு ஓட்டுதல் தான்!

**எத்தனை கொடுமைத் தண்டனை வேற்றுமை! அது மநு தருமமாம்!**

## 19. தலையில் தேங்காய் உடைப்பு

உடலில் தலையே தலையாய உறுப்பு. அவ்வோர் உறுப்பில் கண், காது, மூக்கு, வாய் என்பனவும் மூளைப்பகுதியும் அமைந்துள. தலையைக் காக்க வேண்டியதே தலையாய கடமை. ஆதலால், பண்டே தலைப்பாகை, குல்லா, தொப்பி என உலகோர் அணிந்தனர். 16 முழ ஆடை சுற்றித் தலையைக் காப்பது வட நாட்டார், வடுக நாட்டார் வழக்கம். தென்னாட்டிலும் தலைப்பாகை கட்டியே உழவு வேலை, இறைவை வேலை, வண்டியோட்டல், நடைச் செலவு நடத்தினர். இப்படித் தலையைக் காத்தல் தேவை அறிந்தே துள்ளுந்தில் செல்வார் கட்டாயம் தலைச்சிராய் அணிய வேண்டும் என்று சட்டம் உண்டாக்கப்பட்டது. உடன் செல்வாரும் அவ்வாறே அணிய வேண்டும் என்பதும் உண்டு.

வெயில் தாக்காமல் இருக்கவும் குளிர்வாடை தாக்காமல் இருக்கவும் மழை நனைக்காமல் இருக்கவும் துண்டு துணிகளைப் போடுதல் கண்கூடு.

இவ்வாறாகவும் நூற்றுக் கணக்கான பேரை மொட்டையடித்தும் மொட்டை யடியாதும் வரிசையாக உட்கார வைத்துக் கோயில் காணிக்கையாகத் தேங்காயைச் சட்டுச் சட்டென தலையில் அடித்து உடைக்கும் முறை, சில கோயில்களில் நிகழ்கின்றன. முரட்டுத்தனமும் மூடமும் கலந்து கைகோத்துக் கூத்தாடும் செயலே இத்தேங்காய் உடைப்பாம்.

அத்தேங்காய் அப்படி எளிமையாய் உடைய எத்தகையதாகப் பக்குவப்படுத்தியிருந்தாலும் மெல்லோடாய்த் தேர்ந்தெடுத்திருந்தாலும் தலையில் அடித்துத் தெய்வப் பெயரால் உடைக்கலாமா? உடைக்க விடலாமா?

பள்ளியில் மாணவர் தலையில் குட்டுவதே குற்றம்! சட்டப்படி குற்றம்! இக்குற்றம் பெருங்குற்றம்! வழிப்பறி குற்றம் என்றால், உண்டியல் உடைப்பு குற்றம் ஆகாதா?

ஊரறிய நாடறிய நிகழும் இச்செயலைப் பண்பாட்டுச் செயல் எனலாமா?

பெரிய கோயில்களில் இந்நேர்த்திக் கடன் உண்டா? இத்தகு மூடச் செயலை, எந்தப் பார்ப்பானாவது செய்வது உண்டா?

ஒரு தாய் தன் பிள்ளைமேல் ஒரு பிள்ளை கல்லைப் போட்டால் என்ன போடு போடுகிறாள், அப்பிள்ளையை! தெய்வம் தாயினும் இரக்கமும் தயையும் இல்லா முரட்டுத்தனம் உடையதா?

## 20. பிள்ளையார் கரைப்பு

பிள்ளையார் தமிழகத்துக்குப் புதுவரவு. வாதாவியில் இருந்து வந்தது. முருகு வழிபாடு முன்னையது. முந்திய வழிபாடு பிந்தியதாய், பிந்திய வழிபாட்டை முந்திய தாக்கியது மட்டுமன்றி எங்கெங்கும் பிள்ளையார்! மேலும் சிவனுக்கு மூத்த பிள்ளையார்! கட்டுக் கதையால் தமிழினம் கெட்டுத் தொலையக் கண்ட வேதிய வழி இது! சிவனியர் ஏற்ற சீர்கேடோ சொல்லில் அடங்காது!

முழுமுதலை விட்டார்! முருகையும் விட்டார்! கொற்றவை வழிபாட்டைக் குலைத்தார்! முழுவதாக வேத நெறியும் ஆகமநெறியும் சிவநெறியே என மேற்கொண்டார். சிவனிய மடங்கள் வடமொழி வழிபாட்டையே வழிபாடாக்கி எக்கோயிலில் தேவாரம் பாடப் பட்டதோ அக்கோயிலுள்ளும் அத்தேவாரம் போகாக் கேட்டுக்குக் காரணர் ஆயினர்.

பிள்ளையார் பிறப்புக்குக் கதை கட்டியது, கழிசடை எழுத்தாளன் எழுதவும் நாணுவான்! அப்பிள்ளையார் தாயைப் போல ஒரு பெண்ணைக் கண்டு பிடித்து மணக்கக் கிணற்றங்கரை, குளத்தங்கரை, ஆற்றங்கரை, ஊர் மந்தை எங்கும் கோயில் கொண்டாராம்! அவர் வடிவம் செய்து வழிபட்டு பத்தடி பதினெட்டடி உயரங் கூடச் செய்து வண்ணந்தீட்டி உயிரோட்ட நீரில் கரைந்தோடச் செய்து மாசுபடுத்துதல் மாண்பு வழிபாடாம்! தான் வளர்த்த கள்ளியையும் வெட்ட மாட்டான் என்பது முல்லைக்கலி! வனப்பாகச் செய்து வழிபட்டுக்கரைத்தல் கலைக்குப் பெருமையா? கடவுளுக்குப் பெருமையா?

பிள்ளையார் உடைப்பு கடவுள் நம்பிக்கை இல்லார் செயல் என எவர் பழிப்பாரோ, படைஎடுப்பில் அயல் சமயத்தார் சிலை உடைத்தது சீரழிவு என்பார் எவரோ, **அவரே இச்சீரழிவு செய்தல் வழிபாடாம்!**

முன்னவர் செயலுக்கும் இவர் செயலுக்கும் என்ன வேறுபாடு?

பிள்ளையார் உடைப்பே எதிரிடை. அவ்வெதிரிடை விளைவு என்ன? ஒன்றிரண்டு பிள்ளையார் கரைப்பு 108, 1008 பிள்ளையார் கரைப்பாக்கிய பேறு தான்! **கடவுளை நம்பாமைப்பயன் வேதிய வளர்ப்பும், கோயில் இழப்புமாம்!**

## 21. தென்கலை வடகலை

கடவுளால் ஒருமைப்பாடு உண்டாக வேண்டும். படைத்தவன் ஒருவன் என்று நம்புவார், அப்படிப் பிறரும் நம்ப உரிமை உண்டு என்று எண்ண வேண்டும்!

உங்களுக்கு ஒரு பெயரும் ஒருமுறை வழிபாடும் உண்டு என்றால், மற்றவர்களுக்கும் அவ்வாறு கொள்ள உரிமை உண்டு என்று எண்ணும் சால்பு வேண்டும்.

என் சமயமே உயர்வு. உன் சமயம் தாழ்வு என்று சொல்ல எவர் எண்ணினாரோ அவர், தம் சமயக் கேடர்; அயற் சமயக் கேடர்; மாந்த நேயச் சால்பு இல்லார்; வன்முறை வித்தினை வரன் முறையின்றி வையகமெல்லாம் பரப்பும் குறுமதியர்!

நம்புகிறாயா நம்பு! நம்பவில்லையா நம்பாதே! உன்பாடு! கடவுள் இருந்தால் அவன் பாடும், உன்பாடும்! அடுத்தவன் மேல் காய்தல் முட்டல் கடவுள் பேரால் அழி செயல் செய்தல், தலையைக் கிள்ளல் - காட்டு விலங்குகளுக்கும் கீழ்ப்பட்ட தன்மையர் செயல்.

உன்னை - உன் எண்ணத்தைத் தடை செய்தல் ஆகாது என்றால், அந்த எண்ணமும் உரிமையும் பிறர்க்கும் உண்டு தானே!

கடவுள் உண்டு என்பதைக் கண்ணேரில் எப்படி மெய்ப்பிக்க முடியாதோ! அப்படியே இல்லை என்பதை மெய்ப்பிக்கவும் முடியாது! இருவரும் தருக்கம் செய்யலாம்! தருக்குக் கொள்ளலாம்! முடிவு செய்ய முடியாப் பொருள் அது!

அவ்வாறாகவும் ஒரு சமயத்தை வழிபடு பொருளாகக் கொண்டவர்கள் தங்களுக்குத் தெற்கு வடக்கு என்ன? உங்கள் கடவுளை நீங்களே கூறு போடுவது இல்லையா? கட்சி உடைவது போல கடவுள் அமைப்புகளும் உடைவது ஏன்? உடைவோம் என்றால் உடைந்து போங்கள்! உங்களுக்குள் முட்டுவானேன்? மோதுவானேன்! முழுமுழுத்

தந்நலமும் தடிப்பும் அன்றி வேறு என்ன? தென்கலை நாமம், வடகலை நாமம் - பெருமாளுக்கு மட்டுமா? யானைக்கும் கூட! பாவம் யானை! மனக்கோணல் 'மால்' கோணலாவதா முறை?

## 22. சகுனம் பார்த்தல்

பெற்ற தாய் வெள்ளைச் சீலையோடு உள்ளாள்! உணவாக்கிப் படைக்கிறாள்! உதவுகிறாள்! குடும்பக் காவல் தெய்வமாக நிற்கிறாள், கணவனை இழந்தால் கூட!

அவர் குடும்பத்துக்குக் கலைமகள் - முண்டகச்சி. (முண்டகம் - தாமரை) முண்டைச்சி இல்லை! ஆனால் தெருவில் எவ்வீட்டுக்காரியோ வெள்ளைச் சீலையோடு வரக்கண்டால், செல்லும் செலவுக்கும் செய்யும் செயலுக்கும் தடையாம்! அறிவுடைய பிறவி இப்படி நினைக்குமா? நினைக்குமாறு சாத்திரம் உண்டாக்கி இருக்குமா?

தன்தாய் வேறு - அயல் தாய் வேறா?

அவள் தூயள் என்பதன் சான்றாகவும் கைம்மை நோன்புச் சான்றாகவும் கொண்டால் வழிபடத் தக்கவள் அல்லவா? தொல்காப்பியர் காலத்தே, ஆடவர் மனைவியை இழந்தால் **'தபுதாரர்'** எனப்பட்டார்.

மகளிர் கணவனை இழந்தால் **'தாபதர்'** எனப்பட்டார்! இருவரும் இழப்பின் ஒப்புரிமை ஏற்ற நிலை காட்டுவது அது.

காலம், மாறும் இயற்கையது. இந்நாளில் கைம்மையரைத் தனித்து உடையால் காணமுடியாது. இளமையர், ஆடவரைப் போல மறுமணம் செய்தல் அறம் என ஏற்கப்பட்டது. ஆனால், மணம் புரியாமல் பொட்டு பூ இல்லாமல் வளையல் இல்லாமல் மறுமணம் கொள்ளாத கைம்மை நோன்பர் உண்டு. அவரைக் காணலும் சகுனத்தடை என்னும் சண்டாளர் உண்டு என்றால் - அவர்கள் மங்கல நிகழ்வில் கலந்து கொள்ளல், சிரித்துப் பேசுதல், நல்லூண் கொள்ளல், நான்கு பேர் முன்னிற்றல் கூடா என்றால் இவை எல்லாம் என்ன பிறவிகள்? இப்படி இருக்க வேண்டும் என்பது சாத்திரம் என்றால், அச்சாத்திரத்தைச் சுட்டெரிக்க வேண்டும் அல்லவோ? இது மட்டுமா சகுனத்தடை? பூனை குறுக்கே போதல்,

எண்ணெய்க்குடம் எதிரே வருதல், ஒருத்தி தலைவிரித்து நிற்றல், ஒற்றைப் பார்ப்பானைப் பார்த்தல் முதலியவை எல்லாம் தடையாம்?

மூளைக்கோளாறு உள்ளவர் - அவர்வழி நிற்பவர் - இந் நாட்டில் அன்றி அறிவறிந்தோர் நாட்டில் காண இயலாது!

இச்சகுனம் பார்ப்பதில் படித்தவர் படியாதவர் வேறுபாடு இல்லை! யானையை வெல்லவல்ல வீரன் தொடை நடுங்கியாகிறான் சகுனத்தால் பூனையைக் கண்டு!

## 23. பூக்கட்டிப் போடல்

முன்னதற்குப் பின்பிறந்த தம்பி; அல்லது முன்பிறந்த அண்ணன் பூக்கட்டிப்பார்த்தல்! கயிறு சார்த்தலுக்கும் இதற்கும் பொருளால் (கயிறு, பூ) அன்றி வேறு எவ்வகையாலும் மூடத்தில் குறைந்ததில்லை. வேண்டுமானால் கூடுதல் மூடம் எனலாம்? இச்செய்கை கூறுவதென்ன? தெய்வத்தின் முன்னே நின்று, தெய்வத்தை நம்பாமல் பூவை நம்பல்! சிறுபிள்ளையை அழைத்து, 'நினைத்தது நிறைவேறும் நிறைவேறாது' என்பதை அறியச் சீட்டு எடுத்தல் ஒரு வழக்கம். கிளிச்சீட்டு எடுத்து நம் விதியைத் தீர்மானிக்கும் நாட்டில் சிறுவர் கை தீர்மானிக்கக் கூடாதா என்ன?

பூக்கட்டிப் போட்டால் வெள்ளைப்பூ வெற்றி! சிவப்புப்பூ தோல்வி என்றோ வேறு வகையிலோ எண்ணி எடுத்தால்

எண்ணியது வந்தால் வெற்றியாம்!<br>
எண்ணாப்பூ வந்தால் தோல்வியாம்!<br>
எந்தப் பூவும் வெற்றி தராது! தோல்வியும் தராது!

வேண்டுமானால் என்ன, **உறுதியாக முயற்சியைக் கெடுக்கும்! உழைப்பை - உறுதியை - முயற்சியை நம்பாமல் பூவை நம்பினால் அஃது அறிவுடைமை ஆகுமா?**

தெய்வ எண்ணம் அதன் வழி வரும் என்றால், அப்பூத்தான் வேண்டுமா? அத் தெய்வமே வேண்டுவ தருளி விடலாமே!

"வேண்டத் தக்க தருள்வதும் வேண்டாமலே அருள்வதும் தெய்வம்" என்ற அப்பரடிகளுக்கு மேல் அருள் தொண்டர் யார்? பூவா கட்டிப் போட்டு உழவாரப் பணி பூண்டார்?

"குடி செய்வல் என்னும் ஒருவர்க்குத் தெய்வம்

மடிதற்றுத் தான்முந் துறும்"

என்ற வள்ளுவம் சொல்வ தென்ன?

என் குடும்பத்தை உயர்த்துவேன் என உறுதிபூண்டு உழைப்பானுக்குத் தெய்வமே வரிந்து கட்டிக் கொண்டு முன்வந்து உதவும் என்பதல்லவோ?

பூக்கட்டிப் போட்டு வழிபாடு செய்! குழந்தைக்குச் சூட்டு! மனைவிக்குச் சூட்டு! உன் வேலை தொடங்க அதனிடம் கேட்டு நில்லாதே! அதன் அடையாளம், அடிப்படை அறிவே இல்லேன் என்பதாம்.

## 24. கிளிச்சோதிடம்

தெருவோரத்தில் ஒரு கொடுமை! மாந்தன் வயிற்றுப் பிழைப்புக்குக் குரங்காட்டுகிறான்! பாம்பை ஆட்டுகிறான்! அதே போல் கிளிச்சோதிடம் சொல்வானும் சீட்டு எடுக்க வைத்து முக்காலமும் உணர்ந்த முனிவன் அது தான் என உழைக்கும் உடலை, உழைக்கப் பயன்படுத்தாமல் **கிளியால் பிழைக்கிறான்.**

கிளி தானே பேசுமா? ஆயிரம் முறை அக்கா, அம்மா எனச் சொன்ன சொல்லைக் கேட்டுத் திரும்பச் சொல்லும்! தானாகச் சிந்திக்கவோ பேசவோ மாட்டாது. இந்த அறிவு இருந்தால் கிளி எடுக்கும் சீட்டில் நம்பிக்கை ஏற்படுமா?

ஏதோ ஒரு கட்டில் நாற்பது ஐம்பது சீட்டு! ஏறக்குறைய எல்லாச் சீட்டும் நல்லதும் பொல்லதும் போல எழுதியிருக்கும்! அதற்குத் தரும் தீனிக்காக ஏதாவது ஒரு சீட்டை எடுக்கும் தீனியை வாங்கிக் கொண்டு சீட்டை எடுத்துத் தந்து விட்டுக் கூட்டுக்குள் போய்விடும்! சீட்டை அகல விரித்து பாட்டுப் போலச் சொல்லுவார் சோதிடர். எழுதியுள்ளதைப் படிப்பார்! உன் எதிர்காலமா. அதில் எழுதப் பட்டுள்ளது? எதிர்காலம் அறிந்தா கிளி

எடுத்துத் தருகிறது சீட்டை! தலையாட்டிக் கொண்டு நல்ல பொழுது கெட்ட பொழுது தீர்மானிக்க உதவியதாக எண்ணிக்கொள்கிறாய்! எடை பார்க்கும் கருவியில் எடைச் சீட்டில் உன் எதிர்கால விளக்கம் இருப்பதாக நம்பி எடுக்க மூலம் அது.

கிளி முனிவன் என்னும் வேதியக் கதை இப்படித்தான் உருவாக்கப் பட்டிருக்கலாம்.

மாந்தன் ஆறறிவு பெற்றும் அவ்வறிவை நம்பாமல், அவ்வறிவின் ஆற்றலால் உலக இயக்காற்றலையும் நம்பாமல் தன்னிற் குறைந்த அறிவுடையவை தன் எதிர்காலம் காட்டுவதாகத் தன்னறிவிழந்த பேதைமையும் அதனைக் காட்டிப் பிழைக்கும் பிழைப்பும் பேதைமையில் பேதைமையாம்.

"உள்ளத் தனையது உயர்வு"

என்பதை எவ்வளவு உரைத்தாலும், **கிளிச்சீட்டை நம்புவான் என்றாவது தன்னை நம்பிச் செயல்படுவானா?**

## 25. கயிறு சார்த்தல்

பெரிய பெரிய படிப்பாளிகளுக்கு உள்ள நோய் இது. ஒரு செயலை மேற் கொள்ள அச்செயல் திறம் தனக்கு உண்டா, அதனை எப்படிச் செய்யலாம். செய்தற்கு ஏதாவது தடை உண்டா, அத்தடையை எப்படி நீக்கலாம், நம்மால் செய்ய முடியாததை எவர் துணை கொண்டு செய்யலாம், எக்காலத்தில் எவ்விடத்தில் செய்யலாம் எனச் செய்தலை நினைக்க வேண்டும். வள்ளுவவழி இதுவே.

**வினைத்திட்பம், வினைத் தூய்மை, வினை செயல்வகை, ஆள்வினை உடைமை, காலம் அறிதல், இடம் அறிதல், அவை அறிதல், வலியறிதல், குறிப்பறிதல்** என்னும் வள்ளுவங்கள் இருப்பதை அறிந்தாரும் ஒரு செயலைச் செய்தற்கு. ஒரு நூலை (புத்தகத்தை) எடுத்து, அந்நூலில் ஏதோ ஒரு பக்கத்தில் நூல் போக (கயிறு செல்ல) விட்டு அப்பக்கத்தில் உள்ள செய்தி நல்லதா, கெட்டதா என்பது கொண்டு தொடங்கிச் செய்யும் வழக்கமே கயிறு சார்த்தலாம்!

என்ன தான் படித்தாரோ? எப்படித்தான் இப்படிக் கண்மூடி ஆனாரோ?

தன்னம்பிக்கை யுடையார் இது செய்யார்! மெய்யான
கடவுள் நம்பிக்கை யுடையவரோ இதனைச் செய்யவே
கூடாது! செய்தால் கடவுளைக் காட்டிலும் கயிற்றை
அல்லது நூலை நம்புகிறார் என்பது பொருள்!
சகுனம் பார்க்கும் மூடம் பொது என்றால்,
கயிறு சார்த்தி முடிவு செய்யும் மூடம் **கற்றறிமூடமாம்!**

இவ்விரண்டு மூடங்களில் கற்றறி மூடமே பெருமூடம் அல்லவா?

நூலுக்கு உயிர் உண்டா? உணர்வு உண்டா? நல்லது

கெட்டது நடக்கும் எனக்கூறும் மூளையும் நாவும் உண்டா?

இயல்பாக நடக்கும் நல்ல செயல்கள், இக்கண்மூடித் தனத்தால் எத்தனை எத்தனை கேடுகளை ஆக்குகின்றன. ஆகாச் செயல், ஆகும் செயல் என்பவற்றை முடிவு செய்யும் அறிவுடையதா கயிறு சார்த்தல்?

## 26. வழிபாடு

கிறித்தவன் கோயிலுக்குப் போகிறான்?

எப்படி? **விவிலியத்தோடு!**

இசுலாமியன் பள்ளிவாசலுக்குப் போகிறான்!

எப்படி? **குரானொடு!**

சீக்கியன் வழிபாட்டிடம் செல்கிறான்.

எப்படி? **'கிரந்த சாகிப்'** பொடு சென்று கிரந்தசாகிப்
ஓதுவது கேட்கவும்! அமைந்து வழிபடவும்!

ஆனால், அம்மை, அப்பன், பெருமாள், முருகன், பிள்ளையார் முதலாம்
கோயில்களுக்குப் போகிறவர் எப்படிப் போகின்றனர்?

தட்டில், தேங்காய், பழம், சூடம், பத்தியொடு தானே!

**இவர்களுக்கு வழிபாட்டு நூல் இல்லையா?**

**வாரப்பாடல், வரிப்பாடல், வாய்மொழி, வாசகம்,**

**திருப்புகழ், திருவருட்பா** - இல்லையா? **தாயுமானம்** இல்லையா?

அக்கோயிலைப் பற்றிப் பாடிய - அடியார்கள் பாடிய பாடல்களோடு போகிறார்களா?

இல்லையே ஏன்?

கோயில் மாடுகளாக, செக்குமாடுகளாகச் சுற்றுவதை - தேங்காய் பழத்தட்டில் உண்டியலில் காசு போடுவதை அன்றி ஏதாவது செய்கிறார்களா?

அருச்சகர் இவர்கள் புரிய ஓதுகிறாரா?

அவர் புரிந்து ஓதுகிறாரா?

இவர்கள் புரிகிறார்களா?

ஆட்டுமந்தையா தமிழர்?

சிந்தனை செத்தே போய்விட்டதா?

பக்கத்தைப் பார்க்கக் கூட முடியாத இடுங்கிய பார்வை ஏற்பட்டு விட்டதா?

**எவனாவது, எவ்வினமாவது தன் மொழியில் வழிபடாத இனம் உலகில் உண்டா?**

என் வீட்டுக்குக் **குத்தகை** எவனோவா?

என் அப்பன் அம்மை கோயிலை, '**அடைவு** (அடகு) போட்டுவிட்டேனா? வந்தவன் கொழுத்து வாழக் கொடுத்து விட்டேனா? மானம் உள்ள இனம் இது செய்யுமா? மதியுள்ள இனம் செய்யுமா?'

# 27. வேட்டுப் போடல்

வெட்டு - வேட்டு. கிணறு பாறையாக இருந்தால் கருமருந்து வைத்துக் கிட்டித்துத் தீ எரியத் திரியும் வைத்து வெடிக்க வைத்தனர். பின்னர்க் கோயில் விழாக்களில் பிடாங்கு எனக் கட்டையில் இரும்புக் குழாய் ஊன்றி அதில் மருந்து வைத்துக் கிட்டித்து வெடிக்க வைத்தனர்.

'சீனவெடி' என வேட்டு இவண் எய்தியது. சீனி, சீனிக்காரம், சீனி என்பவை சீன நாட்டுப் பொருள் என்னும் அடையாளமாம்.

இதுகால் சிவகாசி, சாத்தூர், விருது நகர்ப்பகுதிகளில் பெரும்பெரும் தொழிலாகவும் குடிசைத் தொழிலாகவும் நிகழ்கின்றது. அவ்வேட்டுப் போடல் முதுமையில் இறந்தாரைச் சிறப்பாக எடுத்துச் செல்வதன் அடையாளமாகக் கொள்ளப்பட்டது! இதுகால் மண மேடையிலும், வெளியரங்கிலும் பலப்பல வெடி வெடித்தலும் புடைப்பான் (பலூன்) வெடிக்கச் செய்தலும் வழக்கில் வரலாயிற்று! தெரிந்து கொண்டே பண்பாட்டைச் சிதைக்கும் கேடு இஃதாம்! ஒருவரைப் பார்த்து ஒருவர் எனப் பெருந்தொற்றாகப் பரவி வருவனவற்றுள் ஈதொன்று.

தீபாவளி, கார்த்திகை, பொங்கல், ஆகிய விழாக்களும் வேட்டு விழாக்கள் ஆகிவிட்டன.

முது மக்களாகி இறந்தால் வேட்டுப் போடும் வழக்கம் ஏற்பட்டது. பின்னர் நட்டகவையர் (நடுவயதினர்) இறப்பினும் வேட்டுப் புகுந்தது. திருமணத்தில் மங்கல நாண் கட்டும் நல்வேளையில் கெட்டிமேளம் கொட்டல் வழக்கம். கெட்டி மேளம் கொட்டல் ஒலியும் செவியில் படாவாறு வேட்டொலி இடையீடு இல்லாமல் இதுகால் எழலாயிற்று! மணமேடையிலேயே வெடிபோட்டு அவ்வெடிப்பில் துண்டுத் தாள்கள் அரங்க முழுதும் ஆட்கொள்ளப் பரப்புதல் புதிய கலையாகப் புகுந்தது.

வாழ்த்தும் - வழிபடும் - அரங்கில் வேட்டுப் புகுந்தது பண்பாட்டுச் சிதைவு இல்லையா?

வேட்டொலியால் காது கெட்டவர் எத்தனைபேர்? தோல்காது தானே அது. தகரக் காது இல்லையே! இரும்புக் காது இல்லையே! 'வேட்டு வைத்தல்' என்பதற்குக் கொலை செய்து குடியைக் கெடுத்தல் என்னும் மக்கள் வழக்கு உண்டாயிற்றே!

மின் வெட்டு கண்ணைக் கெடுத்து விடல் இல்லையா? இடியால் இழப்பு இல்லையா? ஊரைக் கூட்டி வைத்து இடியும் மின்னலும் ஒருங்கே வரச் செய்யும் வேட்டுப் போடல் நம் பண்பாட்டுக் கேடு என்று உணர்வோமா?

## 28. கடவுள் இல்லை

'கடவுள் இல்லை' என நீ சொல்லலாம்!

முட்டாள் மூடம் எனச் சொல்லலாம்! ஆனால்,

அந்தக் கோயில் என் கோயில்!

என் பாட்டன் கட்டிய கோயில்!

என் பரம்பரை இடத்தில் கட்டப்பட்ட கோயில்!

அதன் கோட்டை கோபுரம் கட்டியவன், என் தந்தை பாட்டன்

பூட்டன் ஓட்டன்!

தாய் பாட்டி பூட்டி ஓட்டி!

அதன் சிலை அடித்தவன் என் அண்ணன்?

அதனை அழகுறுத்தியவள் என் அக்கை?

என் தம்பி தங்கை மக்கள் ஆகிய அவர்கள் காவலர்கள் - கோயில் அவர்கள் கருவூலம் - அவர்கள் இசை கூத்து மேடை - அவர்கள் கருவூலக் காப்பரணம்!

அதனுள் பாம்பு புகுந்து விட்டால் நான் பாம்பை ஓட்டுவதா நானே ஓடுவதா?

ஓடினால் பாம்பு தங்க நிரந்தர இடம் தந்தவன் நான் தானே! வழிகாட்டியவன் நீ தானே!

இது தானோ செய்தக்க செயல்?

அடாவடிக்காரனை ஆளவிட்டு, முக்காடு போட்டுக் கொண்டு, மூலை வழி போவதா போராட்டம்!

தமிழில் வழிபாடு செய்!

இல்லையா, உள்ளே நுழையாதே!

தேவார திருவாசகப் பாட்டுப் பாடாத கோயிலைப் பூட்டு. நீ அந்தச் சம்பந்தனினும் நாவுக்கரசனினும் சுந்தரனினும் மணிவாசகனினும் பெரியாழ்வார் குலசேகரர் ஆண்டாள் திருமங்கையார் முதலாம் ஆழ்வார்கள் கால் தூசிக்கும் ஒவ்வாதவனே, **"வறட்டொலியை நிறுத்து"** என்னாத வரை. **"கடவுள் இல்லை" என்பது கடவுளைப் பெருக்கும் கரவுச் செயல்! நாட்டு நடைமுறையில் கண்டது இது.**

## 29. பிறந்தநாள்

அரச குடும்பங்களில் 'பெருமங்கல விழா' எனப் பழமையில் நடந்து வந்தது. அது, பிறந்த நாள் விழாவாகும்.

அரச குடும்பவிழா ஆதலால், பெருஞ்சிறப்புடன் அமைச்சர் முதலாயவர்களும், ஊராள் கூட்டத்தாரும் ஏன் நாடே விழாவாகக் கொண்டாடியது.

பின்னே பெருஞ்செல்வர்கள் குடும்பங்களில் கொண்டாட்டமாகவும் வளர்ந்தது.

இப்பொழுது பெரிதும், மக்கள் அனைவரும் தத்தம் குடும்பங்களின் விழாவாகக் கொள்ளும் விரிவுற்றது.

மேளதாளம், கொட்டு குரவை, விருந்து விளையாட்டு என இருந்த விழா, இதுகால் மென்மா (கேக்) வெட்டி மெழுகுவர்த்தி ஏற்றி **ஊதி அணைத்து** "கேப்பி பெர்த்டே" என வாழ்த்திசைக்கும் - ஆடிப்பாடிக் கூடிக் குலாவும் விழாவாக வாய்ப்புடையோர் இல்லங்களில் எல்லாம் நடைபெறுவதாயிற்று! **ஆங்கிலர் வழக்கமாக இருந்த இது, கிறித்தவர் விழாவாகிப் பொது விழாவாகி விட்டது தமிழகத்தில்!**

ஆங்கிலர் நல்ல பழக்கங்கள் சில உண்டு! அவற்றைப் பற்றாமல் ஆகாத போலிமையை எடுத்துக் கொண்டு பரப்பும் இம்முறை, நம் பண்பாட்டுச் சிதைவுகளில் ஒன்றாம்.

"பழையன கழிதல் புதுவன புகுதல்"

என்பது இயன்முறையே எனினும், பழைய நலத்தை விட்டுப் புதிய கேட்டை வாரிக் கொள்ளுதலில் தமிழர்க்கு இணையாக எவரும் இலர் என்பதைத் தெளிவாக அறியலாம்!

பிற இனத்தார் - மொழியார் - தம் இன மொழிப் பண்பாடுகளை இழவாமல் காத்தலைக் கண்டேனும் நாம் படித்துக் கொள்ள வேண்டும். நம் பண்பாட்டைக் காத்தல் வேண்டும் அல்லவா!

"மகிழ்வு மிக்க இந்நாள் - நீ
    மகவாய்ப் பிறந்த பொன்னாள்
பெருகிப் பெருகி வருக - நற்
    பேறு யாவும் தருக- மகிழ்வு"
"பனியின் மலரே நீதான் - நற்
    பாகின் சுவையே நீதான்
கனியின் உயர்ந்த கனியே - நீதான்
    கண்ணின் மணியே நீதான் - மகிழ்வு"

இன்னவாறு பாடி இன்புறக் கூடாதா?

மலர்தந்து - சந்தனம் தந்து - வரவேற்கும் நாம் மென்மா வெட்டலும், மெழுகுதிரி ஒளியை அணைத்தலும் ஏற்குமா? கத்தியும் ஒளியணைப்பும் பிறந்த நாள் விழாவுக்குத் தகுமா?

## 30. காதணி விழா

பழநாள் தொட்டே காதணி அணிதல் உண்டு. தமிழைத் தாயாக்கி அவள் காதில் குண்டலமாகக் குண்டலகேசி உள்ளதாகப் பாடும் அளவுக்குக் காது குத்தல் நிகழ்கிறது!

ஏமாற்றுபவனைப் பார்த்து, 'எனக்குக் காது குத்துகிறாயா?'

வேறிடம் பார் என்பது மக்கள் வழக்குச் சொல்.

"வடிந்து வீழ் காது" - கண்ணகிக்கு இருந்ததாகச் சிலம்பு கூறுகிறது. அண்மைக் காலம் வரை காது வளர்த்தல் தண்டட்டி, பாம்படம். முடிச்சு எனக் காதில் தொங்கவிடல் மகளிர் வழக்காக இருந்தது.

ஆங்கிலேயர் இவ்வழக்குக் கொண்டிலர். அதனை ஏன் பின்பற்றக் கூடாது!

காதணியைப் பறிப்பதற்குக் காதறுபடுவோரைக் கண்டும் காதுவளர்த்தல் தொடர்ந்ததே!

உடலிலே கண்ணுக்குத் தெரிய ஒன்பது ஓட்டைகள் உண்டு. அவை இயற்கை வழங்கிய கொடை. காதில் அணிகலன் போட வேண்டும் என்பது இயற்கை நோக்காக இருந்தால், காதில் மூக்கில் அணிகள் போட ஓட்டையை இயற்கை வைத்திராதா? **வள்ளலார்** இவ்வாறு வினாவியும், வள்ளலார் வழிஞரும் காது கொடுக்க வில்லையே!

"குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு"

என்று வினாவியது அறிந்தும், கல்வி தராமல் காது வளர்த்தவர்கள் முன்னே இருந்தார்கள் என்றால், இன்றேனும் கற்ற மகளிர் ஒதுக்கக் கூடாதா? காதணி விழா, திருமண விழாவைப் போல் அல்லவோ நிகழ்கின்றது! இதனுடன் மொட்டை போடல் வேறு!

ஆண்களுக்காவது காது குத்தாமல் விடுகின்றனரா? ஏதோ குறைந்தாலும் முற்றாகக் குறையவில்லை! காரணம் வீர வெளிப்பாடு எனக் காரணம் கூறல் வழக்கம்! இதுவா வீர வெளிப்பாடு! தன்மானம், இன மானம் போற்றல் அல்லவா வீர வெளிப்பாடு!

# 31. பூப்பு நீராட்டு விழா

ஊடகங்கள் இல்லாத பழங்காலத்தில் ஊரவரும் உறவரும் அறியப் பூப்பு நீராட்டு விழா தேவைப்பட்டது.

ஒரு பெண் பெரியவள் ஆகியுள்ளாள். "இனி அவளுக்கு மணத்தகுதி உண்டு. முறைமையுடையவர் மணம் பேசி வர வாய்ப்பு உண்டு" என்பதன் அடையாளமாக ஊரழைப்பும் நீராட்டலும் நிகழ்ந்தன.

இப்பூப்பு நீராட்டு இந்நாளில் உயர் பள்ளியில் படிக்கும் போதே வேண்டுமா? ஊரறியப் பறை சாற்ற வேண்டுமா? மண்டபம் பார்த்து ஊர் கூட்டி வைத்து நிகழ்த்த வேண்டுமா? அவள் கல்வி முடிய - வேலை தேட - தக்க மணமகன் தேட - பூப்பு நீராட்டுத் துணை செய்யுமா? கேடு செய்யுமா?

இயல்பாக உள்ள பெண்மையின் நாணமும் அச்சமும் மேலும் பெருகச் செய்வது, பெற்றோர் செய்ய வேண்டும் தகுசெயலா? திருமணத்திற்கு முன்னால் உறுதி செய்வது போலப், பூப்பு நீராட்டையும் மாமன் உடைதர உடுத்திக் கொள்ளச் செய்து நடத்தி ஒரே விழா ஆக்கி விடலாமே!

1. பூப்பு நீராட்டு விழா!
2. இடையே பெண் பார்ப்புப் படலம்!
3. திருமண உறுதி விழா!
4. முதல் நாள் விருந்தோம்பல்!
5. மறுநாள் மணம்!

ஐந்து விழா ஆக்க வேண்டுமா?

இவ்விழாக்களால் பொருள் இழப்பாலும் கால இழப்பாலும் பெண் மக்கள் குடும்பம் படும் துயர் எல்லார்க்கும் பொதுமைதானே! இதைச் சிந்திக்கக் கூடாதா? காது குத்தாமலே காதணி மாட்டும் முறை வந்து விட்டதே! அதனைக் கொண்டேனும் நிறைவடையலாமே! மொய் வாங்க - சுருள் வாங்க - வேறு விழாவா இல்லை?

# 32. திருமணத் தரகர்

திருமணம், தாம் தாமே நேர்ந்த நிலை போய், பெற்றோர் பார்த்து முடிக்கும் நிலையும் போய், இது கால், திருமணத் தரகர் வழியாக ஏற்படும் நிலையே பெருகியது. தரகர் இல்லாமல் – சோதிடர் இல்லாமல் – பார்ப்பனர் இல்லாமல் – நடைபெறும் திருமணம் அருகிப் போயிற்று.

பிறப்பு, குடும்பம், பாலியல், அகவை, அறிவு, அடக்கம், தோற்றம், பொறுமை, ஒத்துப்போகும் ஒப்புரவு, குறிப்பறிந்து செயலாற்றல் என்பவை பண்டையோர் **மணப் பொருத்தமாகக் கொண்டவை.**

இப்பொழுதோ பேர்ப் பொருத்தம் இராசிப் பொருத்தம் முதலாக வேண்டாப் பொருத்தங்கள் பார்க்கின்றனர்.

தலையில் களிமண் இருந்தாலும் கழுத்தில் காதில் கையில் இருக்கும் தங்கம், கையில் தரும் பொருள், ஊர்தி, வாய்ப்பாக வாழத்தக்க வீடு, வேண்டும் தட்டு முட்டு எனக் கொள்ளையடித்தலே மணப் பொருத்தமாகக் காண்கின்றனர். மணமகன் வீட்டுக்காரர் கேட்டாலும் கேளா விட்டாலும், தரகர் பெண் வீட்டார் மேல் சுமத்திப் பொருளைப் பறித்துத் தந்து, பறித்த பொருளில் தாம் பறித்துக் கொள்ளும் வழியைத் திட்டப்படுத்தித் திருமணவழிப் பறியராகி விடுகின்றனர்.

அவரை விட்டால் வழியில்லை என இரு வீட்டாரும் இசைகின்றனர். பூக் கொடை புடவைக் கொடை, கணவன் தரும் பொருட் கொடை என்பவையே திருமணக் கொடையாக இருந்த நிலை மாறி, **மாப்பிள்ளைக் கொடையாக மாறியது.**

ஆடு மாடு, நிலபுலம், காசு கொடுத்து வாங்கும் பண்பாடு காசு கொடுத்து மாப்பிள்ளையை வாங்கும் பண்பாடாகியது! அவனுக்குக் கால மெல்லாம் அடிமைப்பட்டதுபோல் மகப்பேறு பார்ப்பு, நல்ல நாள் அழைப்பு, நெருக்கடிக்குக் கொடை என ஒவ்வொன்றிலும் பணச் செலவு எனப் பெண் வீட்டார்க்குச் சுமை ஏறியது.

உன் தாய் என் தாய் யார் யாரோ?
உன் தந்தை என் தந்தை யார் யாரோ?
நீயும் நானும் எப்படி அறிந்தோம்!
உள்ளம் ஒன்று பட்டுப் பிரிவறியாநிலை ஆயதே!

என்பது போன்றவை ஏட்டில் இருப்பதை அன்றி வீட்டிலும் நாட்டிலும் காண முடியாப் பண்பாட்டுச் சிதைவாயிற்றே. அதற்குப் பெற்றோரை அன்றித் தரகரும் பெரும் பங்காளி ஆயினரே! 'மணத்தரகர்' பெருக்கம் என்பது 'பணத்தரகர்' பெருக்கமாம் அல்லவோ!

## 33. பெண் பார்த்தல்

களவுக் காதல், கற்பறம் ஆகிய பழநாள் நிலையில், உளம் ஒத்த நிலையே மணவாழ்வுத் தொடக்கமாகச் சிறந்தது.

சாதி சமயக் கட்டு, மேல் கீழ் வருணநிலை அந்நாள் இல்லை. அந்நிலை மாறியபின், பெற்றோரே பெண் பார்த்து முடிக்கும் நிலை ஏற்பட்டது. அதற்குச் சோதிடர் என்று பொருத்தம் பார்ப்பவரும், மணத்தரகர் என மணப் பெண் மாப்பிள்ளை ஆகியவர்களைப் பெற்றோரிடம் கூறித் தொழிலாக்கித் தொகை பெறுபவரும் உளராயினர்.

சோதிடர் பெயர்ப் பொருத்தம் இராசிப் பொருத்தம் முதலாகப் பத்துப் பொருத்தம் பார்ப்பார். இல்லாததை இருப்பதாகவும் இருப்பதை இல்லாத தாகவும் வருவாய்க்காகப் பேசுதல் அவர் வழக்காயிற்று. சோதிடரைக் கேட்டல், ஐயரைக் கேட்டல் என்னும் வழக்கங்களால் அந்நிலை புலப்படும்.

தேடிப் போய்ச் சோதிடரைக் கேட்ட பெற்றோர், தன் மகளையோ, தன் மகனையோ **மனப்பிடித்தம் உள்ளதா** எனக் கேட்கின்றனரா? "பெற்று வளர்த்ததால் தங்கள் எண்ணத்தை நிறைவேற்றல் பிள்ளைகள் கடமை" எனத் தீர்மானித்துவிட்டனர். ஒருவரை ஒருவர் விரும்பிய காதல் மணத்தைத் தடுத்தனர். அதனால், அவர்கள் தலை மறைவாதலும் பெற்றோரைப் பிரிந்து வாழலும் கண் கூடாயிற்று.

பெற்றோர்கள் பிள்ளைகள் வாழ்வை "அவர்களே தீர்மானிக்கும் தகுதிக்கு வந்து விட்டதால், அவர்கள் விரும்பியவாறு நாம் ஏற்றுச் செய்வோம்" என ஒத்திருந்தால், எத்தனையோ இறப்புகளைத் தவிர்த்திருக்கலாம். அந்நிலை இன்றும் முழுவதாக உண்டாகவில்லை. போலிக் காதலரும், வெற்றி பெற்றாரும் இல்லை! பூச்சுத் தங்கமாய் வாழ்நிலை கெட்டனர். இனி, பெண்பார்க்கும் சடங்கு என ஒன்றாக்கிப் பல பேரொடு செல்லுதலும் பலர் பல கால் செல்லுதலும் 'பிடிக்கிறது'

'பிடிக்கவில்லை' எனச் சொல்லாமல் அலைக்கழித்தலும் தொடர்கதை. இது பெற்றோர் வழிக்கேடு! இவ்வாறு பெண்பார்க்கும் படலத்தால் வறுமைப்பட்ட குடும்பங்கள் உருக்குலைந்த குடும்பங்கள் உண்டு! உயரியதாகத் திகழ்ந்த காதல் கற்பறப் பண்பாட்டுச் சிதைவு இஃதாம்.

மனப் பொருத்தம் இல்லா எப்பொருத்தமும் மணப் பொருத்தம் ஆகாது என மணமக்களும் பெற்றோரும் ஒருங்கே எண்ணினால் அன்றி நன்றாகாது.

## 34. பொம்மைத் திருமணம்

கோவலனுக்கு அகவை 16. கண்ணகிக்கு வயது 12. திருமணம் அரசறிய நடந்தது. அக்கால மக்கள் அந்நாள் இயற்கை வாழ்வால் வாழும் தகுதி பெற்றனர். திருமணம் புரிவு தெரிந்தவர்க்குப் புரிந்தவர் நடத்தினர்.

வேதியம் வந்தது. **பூப்பு அடையுமுன் திருமணம் செய்யா விட்டால் அவள் வாழா வெட்டிதான்!**

தாய் வயிற்றில் இருக்கும் போதே திருமண உறுதி! பிறந்த ஓராண்டு ஈராண்டு ஐந்தாண்டுள் திருமணம்! 48 வயதினனுக்கு 7 வயது 8 வயதுக் குழந்தைக்குப் பூட்டுவ பூட்டி வேள்வியாசான் முன் வழங்குதல்!

தாத்தாவின் ஒரு பக்கத் தொடையில் ஓராண் பிள்ளையும் இன்னொரு பக்கத் தொடையில் ஒரு பெண் பிள்ளையும் வைத்துத் தாலி கட்டல்! இவை திருமணமா?

குழந்தைகள் விளையாடும் **'பொம்மைக் கலியாணம்'** பெரியவர்கள் கூடிக் கொண்டாட்டமாக நடத்தியது தானே இது! திருமணமா இது?

தெருவுக்கு விளையாடப் போகும் - சிறுவீடுகட்டி - சிறுசோறு சமைத்து விளையாடும் பருவத்தில், மணம் என்பது ஏற்கும் திருமணமா?

இதனை ஒழிக்க எத்தனை முயற்சி தேவைப்பட்டது. இராசாராம் மோகனர் முயன்று, பெண்டிங்கு என்பாராம் ஆளுநர் சட்டம் செய்து நிறுத்தினர் என்பது வரலாறு.

இந்நாளிலும் கண்டும் காணாமலும் நடவாமல் இல்லை. பள்ளிக்குச் செல்லும் ஐந்து வகுப்பும் முடியாச் சிறுமிக்கு ஊர் கூடி - உறவு கூடி - மணமாம்! செய்தித் தாளில் வருவது கண்கூடு. காவல்துறை தலையீட்டில் நிறுத்தப்படுவதும் - நிறுத்தப்படாமல் மறைக்கப்படுவதும் நடைமுறைச் செய்தி.

நாங்கள் தெய்வப் பிறப்பு என்றவர் கொண்ட கொள்கை எல்லா இனங்களிலும் சீரழிப்பாகிப் பண்பாட்டுக் கேடாக நடைபெறுகின்றது. வாழ்வு தெரிய வேண்டாவா? வாழ வேண்டாவா?

## 35. காதல் மணத்தடை

இந்நாளில் தடை செய்ய வேண்டிய பல, தடையில்லாமல் உலாக் கொள்கின்றன. தடை செய்ய வேண்டாதவை தடை செய்யப்பட்டு வாழ்வைப் பாழ்நிரயம் ஆக்கி வருகின்றன. அவற்றுள் சுட்டத் தக்க ஒன்று தேர்ந்து தெளிந்து 'நானும் இல்லை; நீயும் இல்லை' **'நாம் ஒருவர்'** என உள்ளம் ஒன்றாகிய காதலரைப் பிரித்துத், தாம் சொல்வார்க்குக் கழுத்தைக் கொடு, அல்லது தாம் சொல்வார் கழுத்தில் தாலியைக் கட்டு என்னும் **போலிமானச் செருக்காம்!** மெய்யாகவே அறியாத் தனக் காதல் எனப் பெற்றோர் அறிந்தால் உரிமையர் தெரிந்தால் உண்மை உரைத்து வழிப்படுத்தல் கடமையே! அக்கடமை புரிதல் தவறு ஆகாது. குழந்தைகள் வேண்டும் உணவையெல்லாம் பெற்றோர் கொடுத்து விட மாட்டாரே. குழந்தை, நலக் கேட்டுக்கு ஆளாகி விடக் கூடாது என்னும் அக்கறை பெற்றோர்க்கு இருத்தல் இயற்கை தானே! பெற்றோர் சொல்லை ஏற்பதும் மறுப்பதும் பிள்ளைகள் உரிமை என்றாலும் பெற்றோர் சொல்லிய சொல்லை மேலாய்வு செய்து தக்கதாயின் ஏற்றுக் கொள்ளல் வாழ்வுச் சீர்மை அல்லவா!

மேலாய்வு செய்யத்தக்கது என்றால் ஆய்ந்து முடிவு எடுக்கலாமே! உளமார்ந்த உண்மைக்காதல் கட்டமைந்ததாய்க் காலக்கணக்கைத் தாண்டியும் உறுதியாக நின்று இருபக்கமும் ஏற்கும் வகையில் முழுதுறு ஒப்புதலுடன் மணம் புரியலாமே! உடன் போக்குக் கொள்ளலோ, வேறு முடிவு எடுத்தலோ உடனே ஏன் மேற்கொள்ள வேண்டும்?

எப்பாலும் பிடிவாதம் இல்லாமல் மாறுபாடில்லாத தக்க காதல் உடையாரைப் பிரித்து வைத்து வலிந்து தடையிடல் அவர்களை எதிரிடைப் போக்கில் செலுத்திவிடும். அந்நிலை வாராமல் கலந்து பேசுதல் முடிவெடுத்தல் எல்லாருக்கும் நலமாம். உளங்கலந்து பேசினால் தீராச்சிக்கல் எதுவும் உலகில் இல்லை என்னும் போது, காதல் சிக்கல் மட்டும் தீராமல் போகுமா? கனிவான கலந்துரையாடல் கலகமுதல் அனைத்தையும் வென்றெடுத்தல் வெளிப்படை. கட்டாயத்தால் வழிப்படுத்த எண்ணல் கற்பாறையில் முட்டுதலாம்.

## 36. பொருத்தம் பார்த்தல்

பழநாளில் காதற் கற்பே சிறந்து விளங்கியது. களவில்லாமல் கற்பு நிகழ்வும் நிகழ்ந்திருக்கக் கூடும். அவ்விரண்டும் பொருத்தம் பார்த்தே செய்யப்பட்டவை. அப்பொருத்தம் பார்ப்பவள் தோழி என்னும் ஒப்பிலா ஒருத்தியாம். தோழன் துணையாவனேயன்றித் தோழிபோல் பங்கு கொண்டு கடமை புரிவான் அல்லன். தோழியில்லாமல் தலைவன் கூட்டம் இல்லை. தோழன் இல்லாமல் தோழியால் கூட்டம் நிகழ்தலும் உடன் போக்கும் மணம் நிகழ்தலும் உண்டு.

அவர்கள் பார்த்த மணப் பொருத்த மாண்பு, கண்டதும் காதலாய் – கற்பாய் – மனையறமாய் – அமைந்ததில்லை! அவர்கள் வாழ்வு பரபரப்பு படபடப்பு அமையாத இயற்கை இயங்கியல் வாழ்வு என்பது எண்ணத்தக்கது.

"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"

எனப் **பத்துவகைப் பொருத்தம்** கண்டனர்; பேர்ப் பொருத்தம், இராசிப் பொருத்தம் முதலாகக் கண்டாரல்லர்! ஒருவரை ஒருவர் கண்டு கருத்து ஒன்றி மணந்தனரே அன்றிக் கட்டாயத் திருமணம் செய்தாரல்லர். தகாத்தன்மை என ஒதுக்கப்பட்டவற்றை உடையவரை ஒதுக்கியே மணந்தனர்.

"நிம்பிரி கொடுமை வியப்பொடு புறமொழி
வன்சொல் பொச்சாப்பு மடிமையொடு குடிமை
இன்புறல் ஏழைமை மறப்போடு ஒப்புமை
என்றிவை இன்மை என்மனார் புலவர்"

என்பவை தொல்காப்பிய நூற்பாக்கள் (1219, 1220)

மனப்பொருத்தம் இல்லாத மணப் பொருத்தம், பொருத்தம் ஆகுமா? **நாள் பார்த்தலுக்குக் காட்டும் அக்கறையை ஆள்பார்த்தலுக்குக் காட்ட வேண்டாவா?**

'ஆயிரங்காலத்துப் பயிர்' என்பது பழமொழி. குடும்பம் வழிவழியாகச் சிறக்க ஆயிரங்காலத்துப்பயிர் நாற்றங்காலில் சிறந்து நடவு நிலத்திலும் சிறந்தால் தானே நயத்தக்க விளைவுகளைக் காண முடியும்! மணப்பொருத்தம் பார்ப்போர் பணப்பொருத்தம் பார்க்கும் காலமாக மாறிவிட்ட நிலையும் பெருகத்தானே செய்கின்றது. **பின்னர் உருகத்தானே முடியும்? உருக்காக நிற்க முடியுமா?**

## 37. மாப்பிள்ளைக் கொடை

தலைவன் தலைவிக்குக், காதலித்த போது பூத்தருதலும் உடை தருதலும் வழக்கமாக இருந்தது.

எவரும் அறியாமல் களவுப் போதில் நடப்பவை அவை. அவ்வழியாகக் கணவன் வீட்டார் பெண்ணுக்கு உடை தந்தும் அணிகலம் தந்தும் திருமணம் செய்தல் பண்டை வழக்கின் வழிப்பட்டது.

ஆனால் இந்நாளில் திருமணம் பெண் வீட்டாரை இழிமையும் ஏழைமையும் படுத்தும் வகையில், தொகையும், தங்கமும், வண்டிவகையும், தட்டுமுட்டுப் பொருள்களும் அவற்றை மணப்போதில் எவருக்கும் காட்சிப் பொருளாக வைப்பதும் வழக்கமாயிற்று.

மாப்பிள்ளைக் கொடை (வரதட்சணை) என மேட்டுக் குடியினரும் மேல் சாதியர் எனப்படுவாரும் செய்யத் தொடங்கிய இச்செயல். பொதுப் பொருளாகிவிட்டது. மாப்பிள்ளைக் கொடை இல்லாத் திருமணம் காணற்கு அரிதாயிற்று.

பெண் தன்னொத்த கல்வி கற்றிருந்தாலும், பணி செய்து பொருள் ஈட்டினாலும், மாப்பிள்ளை வீட்டார் கேட்கும் தொகையையும் மற்றைப் பொருள்களையும் விலையாகத் தந்து விற்பனைப் பொருள் போல் ஆக்கப்பட்டமை பண்பாட்டின் பெருஞ் சீரழிவாம்!

பெண்ணும் ஆணும் மனம் ஒத்தால் அது திருமணம் என்பதை இருமனம் கூடின் திருமணம் என்னும் மக்கள் வழக்குச் சொல் மெய்யாய் ஒழித்தது இல்லையா? மாப்பிள்ளைக் கொடையாக வரும் பொருளையே குறியாய்க் கொள்ளையடிப்பதாய் - குருதி உறிஞ்சி எடுப்பதாய் - தரகர் வழியே பேசி முடிப்பதாய் அமைந்த நிலையைக் கடுமையான சட்டத்தால் தடுத்தால் கூட, மக்களாட்சித் தேர்தல் ஊழல் போல ஊழல் திருமணமாகவே அமையும் போலும்!

## 38. திருமணம் - தமிழ்நெறி

திருமணம் பழநாளில் 'கரணம்' எனப்பட்டது. கரணமாவது திருமணச் சடங்கு.

மக்களைப் பெற்றவர்களும் பொதுத் தொண்டு செய்தலில் தேர்ந்தவர்களும் முதியவர்களுமாகிய **மகளிர் நால்வர்** திருமணச் சடங்கு நடத்தினர்.

நன்னாள் - மங்கல நாள் - ஒன்றைத் தேர்ந்தனர். திங்களும் உரோகிணியும் கூடிய நாளாக அஃதிருந்தது. அதனை 'ஓரை' என்றனர். ஒன்றுபடுத்தும் நாள் என்பது அதன் பொருளாம். முழுமதி நாளாக இருந்ததால் அதனை **'முழுத்தம்'** என்றும் கூறினர்.

திருமணம் நடத்தியவர்களைப் 'பொதுசெய் மகளிர்' என்றனர். மணமகளையும் மணமகனையும் நன்னீராட்டி, புத்துடை உடுக்கச் செய்து, மங்கல வாழ்த்து வாழ்த்தி அன்றே ஓரிற்படுத்தனர். (அகம். 86)

ஊட்டமிக்க உழுந்துணவு வழங்கினர்: ஊனுணவு வழங்கியதும் உண்டு. (அகம். 136) திருக்குறளில் 'நன்கலம்' எனப்படுகின்றது. மங்கல அணி ஆகலாம்:

தாலி கட்டிய அல்லது மங்கல நாண் சூட்டிய செய்தி அகப் பாடல்களில் இல்லை.

சிலப்பதிகாரத்தில் தான் மாமுது பார்ப்பான் மணவினை நடத்தியதும் தீவலம் செய்ததும் காணப்படுகின்றன.

மகளிர் நடத்திய சடங்கு பின்னே ஊர்த்தலைவர் நடத்துவதாகி, அயல் மொழி மந்திரம் ஓதல், அம்மி மிதித்தல், அருந்ததிகாணல், தீவலம் வருதல் என மாற்றமடைந்து இன்று வரை தொடர்கிறது. தமிழர் அயல் நெறியை அகற்றத் துணியாததால், அயல் நெறிச் சடங்கு தொடர்கின்றது.

சிந்திப்பவர் தமிழ் உணர்வாளர் மேற்கொண்டாலும் தொலைக் காட்சி திரைப்படம் ஆகியவையும் தமிழ் உணர்வில்லாரும் கட்டிப் பிடிக்கவே கெட்டியாக உள்ளமையால் வேதியச் சடங்கு ஒழிக்க முடியா நிலையில் உள்ளது! அண்மையில் உண்டாகிய விழிப்பு, தமிழ் நெறி மணத்தைத் தழுவுவாரைப் பெருகச் செய்து வருகின்றது.

## 39. திருமண வரவேற்பு

புதிதாகத் தோன்றிப் பெருக்கமாக வரும் விழாக்களில் திருமண வரவேற்பு என்பது ஒன்று.

மணநாளுக்கு முதல் நாள் இரவில் இந்நிகழ்வு நிகழும். மணமக்கள் புத்துடையும் மாலையும் பூண்டு மேடைக்கு வர, இசை முழக்க, வரிசை வரிசையாகப் பரிசு வழங்கிப் படம் எடுக்க விருந்துண்ண என நிகழும்.

இதே விழாவில் திருப்பூட்டு அல்லது விரலாழி மாற்றல் அல்லது மாலை மாற்றல் நடத்தி விட்டால் மண நிறைவே முடிந்ததாகி விடுமே!

அவரவர் பணிகளைச் செய்யத் தடை இராதே. இரட்டை விழா - நான்கு விருந்து என விரிக்க வேண்டுமா? பணச் செழுமை இருந்தால் பலர்க்கு வேலை தரும் தொழிலகம் ஒன்றை மணமக்கள் பெயரால் தொடங்கிப் பல குடும்பங்களை வாழ வைக்கலாமே!

வேலையைக் கெடுத்து விருந்து கொடுத்துக் காலத்தையும் பொருளையும் வீணடிக்க வேண்டுமா?

இலையில் போடப்பட்ட உணவில் வெளியே கொட்டப்பட்ட உணவு இருமடங்கு மும்மடங்கு ஆகவில்லையா? கண்ணாரக் கண்டும் விருந்தினர் அமர்ந்தபின் வேண்டும் உணவைப் படைக்கும் முறையின் செய்ந்நேர்த்தி புலப்படாதா?

உணவை வீணே கொட்டல் பண்பாடா?
தெருவை நாறஅடிக்கும் கேடா, பணப் பயன்பாடா?
உயிர் கொடுக்கும் உணவை உதறி எறிவதா பண்பாடு?
குப்பைப் பொருளா, உணவு?
இது பண்பாட்டுச் சிறப்பா? பாராட்டு முறையா?

## 40. அம்மி மிதித்தல்

திருமணம் ஆரிய அல்லது வேதிய வழிப்பட்ட பின்னர் அம்மி மிதித்தல் அருந்ததி பார்த்தல் என்னும் சடங்குகள் நுழைந்தன.

கௌதம முனிவன் மனைவி அகலிகை. அவள் இந்திரனைக் கரவில் கூடினாள். அதனை அறிந்த கௌதமன் அகலிகையைக் கல்லாகப் போகுமாறு சாவித்தான் என்பது இட்டுக் கட்டப்பட்ட கதை!

கற்புக் கெட்டவள் கல்லாவாள்! அக்கற்புக் கேடு மிதிபட்டு இழிவு செய்யப்படும்! ஆதலால், 'கற்பாக இரு' என்று பெண்ணுக்குத் திருமணப் பொழுதில் அறிவுறுத்தும் சடங்கு இது!

இதனை இச்சடங்கு செய்பவர் அறிந்தும் கூறார். சடங்குக்கு அழைப்பவரோ, சடங்கில் கலந்து கொள்பவர்களோ இச்சிறுமைக் கதையை அறியார்! மங்கல விழாவில் இக்கீழ்மைக் காட்சியையோ நடைப்படுத்த வேண்டும்? ஆண் கற்புக் கெட்டால், அவனுக்கு என்ன தண்டனை? அதனைக் காட்டும் சடங்கு இல்லாமை ஏன்?

பெண்ணை இழிவுபடுத்தும் சடங்கு என்பதைப் பெண்களும் அறியார்! ஆண்களும் அறியார்!

மனைவியின் காலைப்பற்றி மாப்பிள்ளை அம்மிமேல் வைத்து மிதித்தல் வேதியச் சடங்கில் ஒன்றாம். இதனோடு நிகழ்வதே அருந்ததி பார்த்தல் என்பது.

# 41. அருந்ததி காணல்

அருந்ததி என்பாள் வசிட்ட முனிவன் மனைவியாம். அவள் ஒருத்தி மட்டும் சிவனே விரும்பி வந்தாலும் கற்புக் கெடாமல் காத்தாளாம்! மற்றை முனிவர் மனைவியர் அறுவர் அப்படிக் காக்க வில்லையாம்! ஆதலால், கற்புடையவளுக்கு எடுத்துக் காட்டாக அருந்ததி சொல்லப்பட்டாள்.

அவள் பெயரால் தான் அருந்ததி என்னும் விண்மீன் வானில் ஒளியோடு விளங்குகிறதாம்!

பட்டப்பகலில் மண மண்டபத்துள் இருந்து கொண்டு பெண், அம்மி மிதிப்பாளாம்! மேலே பார்த்தால் அருந்ததி பளிச்சிடுவாளாம்!

சொல்பவன் சொன்னாலும் கேட்பவருக்கு அறிவு வேண்டாவா?

கற்புக் கெட்டால் கல்லாவாய்!

கற்பைக் காத்தால் அருந்ததி யாவாய்!

என்பது வேதியமுறை அறிவுரையாம்.

கற்பு என்பது என்ன? எவனோ கற்பித்ததா? எதுவோ கற்பித்ததா? இல்லை! இல்லை!

தலைவனும் தலைவியும் ஒன்றுபட்ட உளத்தராய்,

"நீயாகியர் என்கணவனை; யானாகியர் நின் நெஞ்சு

நேர்பவளே" என்றும்,

"நின்னைப் பிரியேன்; பிரியின் உயிர் தரியேன்"

என்றும் களவுக் காதலில் தாங்கள் கூறிய சொல்லைக் கடைசி வரைக்கும் காத்தலே கற்பாம்.

"கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை"

என்பது அதன் இலக்கணம்! ஔவையார் மொழிந்தது!

**பொய் புனைவில் புரள்பவர் மெய்கண்டார் ஆவரா? ஆகவிடுவரா?**

# 42. தீ வலம்

வேதியத் திருமணம் என்பது தீவளர்த்து வேள்வி செய்து நடைபெறுவதாம்! தீயில் நெய், அரிசி, பட்டுத்துணி, மணி முதலியவற்றைப் பெய்து மந்திரம் சொல்லி நடத்துவதும் மும்முறை கைத்தலம் பற்றிக் கணவனும் மனைவியும் சுற்றி வருவதும் ஆகிய சடங்காம்!

இல்லறத்தார் செய்ய வேண்டிய வேள்வி பசியாற்றுவதாம் விருந்து என்னும் வேள்வியே யாம்.

பிறந்த நாள் முதல் முடிவு நாள் வரை உள்ள நோய் பசிநோய்! இயற்கையாகவே உள்ள நோய்! எல்லா உயிர்க்கும் உரியது! அதனைத் தீர்க்கும் வேள்வியே வேள்வி என்பதைத் திருவள்ளுவர் 'விருந்தென்னும் வேள்வி' என்றார்.

குளிர்நாட்டில் குளிர் போக்குவதற்காக மூட்டப்பட்ட தீயின் பக்கல் இருந்து குளிர்காய்தல் வழக்கம். அவ்வழக்கம் வெப்பு மிக்க தமிழ்நாட்டைப் பற்றி அலைக்கழிக்கிறது!

திருமணத்திலும் கோயில் குடமுழுக்குக்கும் வேள்விக்கும் செலவிடும் செலவு கணக்கிடத் தொலையாது!

வேள்வித்தீயே பற்றி எரிந்து மணமக்கள் முதல் பலர் மாண்டும், **தன்னறிவு வாராக் கூட்டம் தமிழ்க் கூட்டமே!**

வேள்வி என்பது வேதியம் பிழைக்க வழங்கப்படும் ஊட்ட உணவு என்பதும், ஊசி இல்லாமல் உறிஞ்சப்படும் 'குருதி' என்பதும், தமிழர் என்று தான் உணர்வரோ?

சைவமும், வேதியம் போல் பற்றிக் கொண்ட வேள்வி முறையைக் கூடிக் கைகோத்துக், கும்மியடித்துக் குழி தோண்டுவது போல நிகழ்வதாயிற்று! தீவளர்த்து - வேள்வி செய்து - சைவ நால்வர் வள்ளலார் தாயுமானவர் பாடல்பாடி விளக்கம் செய்து மணவினை நடத்துதல் பாதி வேதியமும் மீதி சைவமுமா?

# 43. காசிச் செலவு

திருமணச் சடங்குகளில் ஒன்று காசிச் செலவு என்பது. மணமேடைக்கு வந்த மணமகன் கையில் ஒரு குடையை எடுப்பான். கக்கத்தில் இடுக்குவான்; 'திருமணம் வேண்டா' என்று காசி யாத்திரைக்குப் புறப்படுகிறானாம்!

பெண்ணைப் பெற்ற பெரும்பாவியாம் 'மாமன்' அவனைத் தொடர்ந்து பின்னே சென்று, "யானோ என் மகளோ ஏதாவது உங்களுக்கு விருப்பமில்லாச் செயலைச் செய்திருந்தால் நீங்கள் பொறுத்துக் கொண்டு, என் மகளுக்கு வாழ்வளிக்க வேண்டும்" என்று காலைக் கையைப் பிடித்து அழைத்து வந்து மேடையில் அமர வைத்துத் தாலி கட்டுதல் **காசியாத்திரை** என்னும் நிகழ்வாகும்.

பெண்ணையும் பெண்ணைப் பெற்றவனையும் இல்லறத்தையும் இதற்கு மேல் இழிவுபடுத்த முடியுமா? இதனை வழிவழியாக ஏற்றுக் கொண்டு தொடரும் மூடம் என்றாவது திருந்தும் மூடமா? இதனைச் செய்ய வைப்பவன் பெற்றோர்க்கும் இவன் மனைவிக்கும் இப்பழி சேர்ந்து தானே இவன் பிறந்தான்; இதனைச் செய்ததை - செய்வதைக் - கண்டார் எவர்க்கேனும் சிந்திக்கும் திறமே இல்லையா? அல்லது இல்லாமலே ஆக்கப்பட்டு விட்டதா?

காசிக்குப் போகப் போவது மெய்யானால், தன் வீட்டில் செய்ய வேண்டும் கருமாதியைச் செய்து விட்டு, மணமண்டபத்திற்கு வராமலே போக வேண்டியது தானே! மேடை வந்து இந்த மேட்டிமைச் சடங்கு செய்வானேன்?

காசிக்கு மணிக்கணக்கில் போய்விடும் அறிவியல் காலம் இது. முன்னாளில் காசிக்குப் போனவன் திரும்பாமலே முடிந்து விடுவான் என்னும் நிலையில் காசிக்குப் போகுமுன் கருமத்தை முடித்தல் என இருந்தது! அண்டத்தையே ஒரு நாளில் வலம் வரும் நாளில் இக்கேலிக் கூத்தா?

# 44. மஞ்சள் அரிசி மலர் எறிதல்

மணமக்கள் மணைப்பலகையில் இருப்பார்கள். ஏனெனில் 'புரோகிதர்' நாற்காலி மேலிருந்து கொண்டா வேள்வித் தீ வளர்க்க முடியும். கீழேயுள்ள குழியில் நெருப்பு எரியக் கீழே உட்கார்ந்து தானே நெய்யும் பிறவும் வார்க்க வேண்டும். அவர் கீழே உட்கார - வேதியர் கீழே உட்கார - நாற்காலி மேல் மணமக்கள் அமரலாமா?

பிராமணனோடு சமமாகப் பலகையில் சூத்திரன் ஒருவன் அமர்ந்தால் அவன் தொடைக்கு மேல் இடுப்பில் சூடு போட்டும் சதையைப் பிய்த்தும் ஊரை விட்டு ஓட்ட வேண்டும் என்பதல்லவோ மநுநெறி.

ஆதலால், மணமக்கள் கீழே உட்கார்ந்து புரோகிதர் சொல்லிய சடங்கைச் செய்யும் போதே மஞ்சள் அரிசி, பூ ஆயவற்றை அவையில் இருப்பார்க்குத் தருவார்கள். திருமங்கல நாண் பூட்டும் போது கெட்டிமேளம் கொட்டுவார்கள். அவையோர் எங்கிருந்தோ மஞ்சள் அரிசியையும் மலரையும் வீசி எறிவார்கள். முன்னால் இருப்பவர் அனைவரும் தலையைத் தடவுவார்கள்! இப்படி ஓரிடமா? ஈரிடமா? எங்கெங்கும்! ஒருவருக்காவது இது முறை கேடாம் செயல்; நேரில் சென்று அல்லது வரச் செய்து தூவலாம் என்ற எண்ணம் வரக் கூடாதா? வாராதபடி வேதியம் பார்த்துக் கொள்கிறது. வேதியத்தின் வழியே வழிதான் என்னும் தமிழரும் ஏற்றுத் தம் மடமையை வெளிப்படுத்திக் கொண்டே உளர் மணமுடித்து மணமக்கள் அவைக்கு ஊடே வர மக்கள் மலரை எடுத்துத் தூவி வாய் வாழ்த்த கண் மலர்ந்து நோக்க நெஞ்சம் நெகிழ நிகழ்த்தக் கூடாதா?

# 45. மொய் எழுதுதல்

"எறும்பு மொய்க்கிறது; ஈ மொய்க்கிறது" என்பவை மக்கள் வழக்குகள் பலவாகக் கூடி இருத்தல் மொய்த்தலாகும். அது போல் மாப்பிள்ளையின் சார்பு உடையவர் ஒருபக்கம் பொருளையும் பெயர் முதலியவற்றையும் பதிவு செய்வார். முன்னர் மொய்யெழுதப்பட்ட வீட்டுக்காரர் அத்தொகைக்குக் குறையாமல் எழுதுவது வழக்கம்.

வட்டியில்லாக்கடன் என்னும் மக்கள் வழக்கு இதனைக் காட்டும். முன்னே எழுதிய மொய்யை எழுதவில்லை என்றால் அவர் வீட்டுக்கே சென்று கடன் தண்டுவார் போலத் தண்டுதலும், தராவிடின் சண்டையிட்டு அடிதடியாதலும் உண்டு. சிலர் வீட்டில் மங்கல விழா வெல்லாம் நிகழ்ந்து முடிந்திருக்கும். மேலும் விழா வைக்கும் நிலை இல்லாமல் இருக்கும். எனினும் அவர் சிலர் வீட்டு நிகழ்வுகளுக்குச் சென்று மொய் எழுதியிருப்பார். அம்மொய்யை வாங்க வழியென்ன?

'**மொய்யெழுதுதல்**' என ஒரு விழாவே எடுப்பார். முன்னே மொய்ப் பணம் பெற்றாரெல்லாம் தவறாமல் சென்று விருந்துண்டு மொய்யெழுதி வருவர்!

மணமக்களுக்கு நேரில் சென்று தம் அன்பையும் வாழ்த்தையும் காட்டும் வகையில் பணமோ நினைவுப் பொருளோ வழங்கலாம். இம்மொய் முறையால் ஏற்படும் குடும்பத் தகராறுகள் பல தீராப்பகையாய் போராய் முடிவதும் உண்டு!

நன்கொடைப் பெயரால் ஏற்படும் பண்பாட்டுச் சிதைவு இஃதாம்! அதிலும் போட்டி போட்டு ஒருவருக்குமேல் ஒருவர் தொகை எழுதி, மீளத் தர முடியாமல் செய்யும் குடிகேடு!

முன்னாள் மொய் மணமகன் கையில் ஒரு சிறு தொகைதருதல் மீள எதிர்பாராத் தொகையாய் இருந்தது, இது கால் இவ்வுலாக் காட்சியாகிவிட்டது.

பெண்ணுக்குக் கொடுக்கும் கொடை முன்னே சுருள் எனப்படும். வெற்றிலையை மடக்கி அதில் பணம் பணத்தாள் தரலால் சுருள்

எனப்பட்டது. சுருள். வெற்றிலையை மடக்கித் தருதலால் ஏற்பட்டாலும் இது கால் அந்நிலை மாறி மொய்யாகவே தனி ஏடு போட்டு எழுதும் நிலை ஆயிற்று! அதன் கதையும் மொய்க்கதையே! நன் கொடையும் வன் கொடையாதல் நாட்டின் பண்பாட்டுச் சிதைவாம்.

## 46. “சண்டா” - குதியாட்டம்

அருமையான இசைக்கருவிகள் குழல், யாழ், வீணை, மத்தளம் என்பவை. இவற்றை ஒழித்து ஆங்கிலேயரின் வெடிமுழக்கப் பறைகள் கிளர்ந்து செவிப் பறைகளைக் கிழித்தன; கிழிக்கின்றன. இது போதாதென்று, இப்பொழுது இறக்குமதியாகின்ற ஒன்று, கேரளத்துச் **'சண்டா'** என்னும் தோல் முழக்கப் பறை.

செவிப்பறை கிழித்தாலும் கிழிப்போம் என விடலைகளைத் தேர்ந்து பத்து இருபது பேர்கள் அடிக்கிற அடிப்பு, போர்க் காட்சியாகி விட்டது. தோற்காதுள்ளவர் கட்டாயம் தாங்கார்.

இளவட்டங்கள் பெரிதும் திருமணமாகாத இளைஞர்கள் முழங்குவதால் குதிப்பின் மேல் குதிப்பு! முழக்கத்தின் மேல் முழக்கம்! நிறுத்து என்றாலும் நிறுத்தாத வெடிப்பு!

வெட்டித்தனமாக வெடி வெடிக்கும் தீய இசைமுழக்கு!

**இன்னும் இரண்டு:**

ஒரு மணத்தில் மூன்று மேடை.

**வடபால்** வழக்கமான குழல், மத்தளம் முதலியவை ஒரு மேடை,

**கீழ்பால்,** மேல் நாட்டினரின் பல்லிய இடிப்பறைகள்!

**தென்பால்,** சண்டா வீச்சும் வீறாட்டமும்.

**மேல்பால்,** கிழக்கு நோக்கி மண மேடை! இந்நிலையில் நாலுபக்கமும்! செவியில்லாமை நன்மையா? செவியே கேளாமை நன்மையா?

வாழ்த்துமுறை இதுவா?

வாழ்த்த வாய்க்கு இடமுண்டா? வாழ்த்துவார்க்குச் செவிதரல் உண்டா?

திருப்பூட்டு நிறைந்தால் இலையைத் தேடி முந்துவார் நிலை,
பண்பாட்டுச் சிதைவு இல்லையா?
வாழ்த்த வந்தவர் வாய், வாழ்த்தாமல் இலைக்குத்
தாவி யோடி வாய் வைக்குமா?

## 47. அறுபதாம் கலியாணம்

ஒரு நிறுவனம் அல்லது அமைப்புத் தொடங்கி 25 ஆண்டுகள். ஆனால், வெள்ளி விழா எனக் கொண்டாடுவது வழக்கம். 50 ஆண்டுகள் ஆனால், பொன்விழா எனவும், 60 ஆண்டுகள் ஆனால், மணி எனவும் கொண்டாடுவது மக்கள் வழக்கு.

கணவன் வயது 60 தொடக்கம் முதல் அவ்வாண்டு நிறைவு வரை மணிவிழா ஆண்டாகக் கொள்ளப்படும். கணவன் வயது கொண்டு கொண்டாடப்படும். மனைவிக்கு அப்பொழுது 60 வயதுக்கு உட்பட்டே இருக்கும். ஆயினும் கணவன் வயது கொண்டே தீர்மானிக்கப்படுகிறது.

60 வயது, கணவனுக்கு அல்லது ஒருவனுக்கு ஆகிவிட்டால் அவன் மணமாகாதவன் எனினும், மனைவி இழந்தவன் எனினும் கொண்டாப்படுவது போல், மனையறம் கொள்ளாதவர் எனினும் கணவனை இழந்தவள் எனினும் பெண்ணுக்கு மணிவிழாக் கொண்டாடப்படுவது இல்லை. ஆணும் பெண்ணும் சமம் என்னும் நிலையில் பெண்ணுக்கு, அறுபது வயது ஆனால் கொண்டாடும் முறைமை ஏற்படின் தக்கதாம். பெண்ணுரிமை போற்றப்படுவதுமாம்.

மணிவிழா என்பது பட்டை தீட்டப்பட்ட மணி போல் இனி அவர் வாழ்வு மாசிலா வாழ்வாகவும் குடும்பத்திற்குச் செய்ய வேண்டும் செயல்களை எல்லாம் செய்து முடித்த நிலையில். இனிக் குடும்பப் பொறுப்பை மக்கள் ஏற்று நடத்தத் தாம் வழிகாட்டியாக இருந்து இல்லறத் துறவினராய் வாழ எடுக்கப்படும் விழாவாகக் கொள்ள வேண்டியதாம். ஆசிரியர் தொல்காப்பியர் காட்டிய வழி இது.

ஆனால் இவ்வரிய விழாவை **அறுபதாம் கலியாணம்** என ஆக்கி, மீண்டும் கணவனுக்கும் மனைவிக்கும் மணச்சடங்கு நடத்துதல் ஆரிய வழிப்பட்ட **கேலிக் கூத்தாகும்.**

மணம் நிகழ்த்தும் சடங்காக எரிவளர்த்து மாலையிட்டும் தாலி கட்டியும் ஊஞ்சலாடச் செய்தும் கொண்டாடுவது வெட்கமாம்! இப்பொழுது 70 இல் முத்துவிழா, 75 இல் பவழவிழா, 80 இல் வயிரவிழா என்பனவும் இந்நிலையிலேயே நிகழ்த்துதல் நம் பண்பாட்டுச் சீரழிவுச் சான்றாம்.

## 48. தாலி களைதல்

கணவனை இழந்த மனைவி தம்மை அழகு செய்யார்; ஊண் உடை ஆயவற்றிலும் கணவனோடு வாழ்ந்த நாளில் கொண்ட சுவை அழகு ஆயவற்றை இழந்து விட்டவர் போலவே நோன்புடையவராய் வாழ்வார்! இஃது இயல்பாக ஏற்படும் நிலை! எவரும் சொல்லாமலே தாமே மேற்கொள்ளும் கடைப்பிடி நிலை. கைம்மை என்பதன் பொருளே கட்டமை ஒழுக்கமாம்! (கைம்மை காண்க). கணவனை இழந்தவள் பூச்சூடாள்; வளையல் அணியாள். நெற்றியில் பொட்டும் இடாள்! வேறு ஒப்பனை எதுவும் செய்யாள். மங்கல விழாக்களில் முன் நில்லாள். இவை எவரும் சொல்லி ஏற்படாமல் தாமே ஏற்படும் தற்கட்டுநிலை! தாலிகளைதல் என்பது உற்றார் உறவினர் செய்யும் சடங்காக நிகழ்கின்றது.

பழநாளில் தாலி அணிதல் மணச்சடங்கில் இடம் பெற்றதாக மணம் பற்றிய பாடல்கள் கூறவில்லை. சிறுவர் அணிகலமாக இருந்தது பின்னே திருமண அடையாளப் பொருள் ஆயிற்று. இவ்வாறாகக் கணவன் இறந்த பதினாறாம் நாள் அல்லது குறித்த ஒரு நாள் அவளுக்குப் பூட்டுவன பூட்டி, சூட்டுவன சூட்டி எழில் மங்கைக் கோலமாக்கி எல்லாரும் சேர்ந்து தாலியைக் களைந்து ஒப்பனைகளை அகற்றி வெள்ளுடை உடுத்துவித்து ஒப்பாரி வைத்தல் கொடுமையாம். **ஒவ்வொரு நாளும் செத்துப் பிழைக்கும் சீரழிவாம்!**

இனி இவற்றையன்றித் தலையை மொட்டையடித்தலும் பாய் படுக்கைகளைப் பயன்படுத்தாமல், பழங்கஞ்சியுண்டு வாழவைக்கும் கொடுமையும் பெண்ணைப் பெண்களே படுத்தும் அவலமாம்!

வெள்ளைச் சீலையுடையாள் 'கலையுடையாள்' ஆகிய கலைமகள்! அவள் கோலமாக்கிய தாகக் காட்டித் தூய மனத்தவள் என்றாக்கி அவள் சொகின (சகுன)த் தடை எனல் எத்தகைய பாழுங்கொடுமை! இக்கொடுமை ஓரளவு குறைந்து வரினும் முற்றாக ஒழியாமை உண்மை! பெண்களே துணிந்தால் அன்றி இப்பேரிழிவு நீங்க எவ் வாடவர் முயன்றாலும் - சட்டம் விதித்தாலும் நடைமுறைக்கு வருதல் அரிதாம். இக்கொடுமையுண்டா? அவன் விரும்பின் மணத்தடை இல்லையே!

## 49. கைம்மைக் கொடுமை

கை என்பது ஒழுக்கம்; கைகோள் என்பது பழஞ்சொல். ஒழுக்கம் போற்றுதல் என்னும் பொருளது.

கைக்கிளை என்பது ஒழுக்கம் உருவாகும் - தோற்றமுறும் - நிலை. கைந்நிலை என அகப்பொருள் நூல் உண்டு. கையறுதல், கையாறு என்பவை செயலற்றுப் போதல். துன்பம் என்னும் பொருளன. இப்பொருள் கைம்மைத் துயர்வழி ஏற்பட்டதாகும்.

கைம் பெண்டாட்டி, கைம் பெண் என்பவை கொச்சை வடிவில் 'கம்மனாட்டி' என வழங்கி வசைப் பொருளாயிற்று.

வெள்ளைத் தாமரையில் வெண்பட்டுடுத்து வெள்ளை அணிகலம் பூண்டிருப்பவளாகச் சொல்லப்பட்ட கலைமகளுக்கு முண்டகச்சி என்பது பெயர். முண்டகம் தாமரை; முண்டகச்சி தாமரையில் இருப்பவள். அச்சொல்லே 'முண்டச்சி' என இழிமைச் சொல்லாக வழங்குகின்றது.

கைம்மைக் கொடுமை மேட்டுக்குடியரையும் மேற்குடியரையும் கொடுமைப் படுத்தியதுபோல் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களைக் கொடுமைப்படுத்தவில்லை.

தாலி களையப்பட்டாலும் வெள்ளையாடை கட்டவில்லை. மறுமணம் செய்யத் தடையில்லை. ஆடவன் மனைவியை இழந்தால் மறுமணம் செய்வது போல அவளும் செய்து கொள்ளத் தடையில்லை. இவ்வகையில் அவர்களை நாகரிகர் என்றும் பண்பாடுடையவர் என்றும் பாராட்டலாம்.

கொட்டை நூற்றல் அல்லது நூல் நூற்றல் கைம்மையர் தொழிலாக இருந்தமை பழநூல்களால் அறியப்படும் செய்தி. கணவன் இறந்ததும் இறப்பதும், உடன் கட்டையில் தானே ஏறுவதும் ஏற்றப்படுவதும் உண்டாயிற்று. பின்னே உடன் கட்டை ஏறுதல் சட்டத்தால் தடுக்கப்பட்டாலும் சிறுமைப்படவே ஆயினர்.

இப்பொழுது கல்வி கற்று - பெண்ணுரிமை கண்டு - ஆடவர் தொழிலெல்லாம் தாமும் செய்யும் நிலை உற்றமையால் கைம்மையின் கொடுவாய் மூடியிருக்கிறது. கைம்மையை ஆடவரினும் பெண்களே வளர்த்தனர் என்பது கண்கூடு.

தீப்பாய் அம்மை கோயில் என்பது உடன் கட்டை ஏறியவர். நினைவகமாம். அதற்கு முன்னோடி கண்ணகி கோயில் எனலாம். அதற்கும் முற்பட்டது பூத பாண்டியன் தேவி எரி மூழ்கல் (புறப்பாடல் - 246.)

## 50. கருமாதி

கருமம், தமிழ்ச் சொல், "தவம் செய்வார் தம் கருமம் செய்வார்"

கருமம் = கடமை.

ஆதி, தமிழ்ச்சொல், "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி"

ஆதி = முதன்மை, முதலானது.

கருமாதி தமிழ்ச் சொல்லாகவும் செய்யும் சடங்கோ ஆரியவழிப் பட்டது. அதன் விளக்கம் போல் அமைந்தது, "ஐயருக்கு அரிசி கொடுத்தல்" என்பது.

இறந்தவர் உயிர் வீடுபேறு அடையாமல் அங்கும் இங்கும் திரிகின்றதாம். அதனை வீடு பேற்றில் சேர்க்க வேதியர் வந்து சடங்கு செய்து, சாணக நீர் தெளித்துத் தீட்டுக் கழித்தால் சொடுக்கியைப் போட்டவுடன் விளக்கு எரிவது போல வீட்டுலகில் சுடர் விடுவாராம் இறந்தவர்.

அத்தென்புலம் - வீடு பேற்றிடம் - செல்லும் சடங்கு

"தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுத்தல்"

ஆகும் என்பர் (புறம் 9) அப்பாடல் போரில் பார்ப்பனரையும் பசுவையும் மகளிரையும் மகப்பெறாதாரையும் களத்தில் இருந்து ஒதுக்கி விட்டுப் போர் புரிய வேண்டும் என்னும் வேதியக் காப்பாக வந்தது.

செங்குட்டுவன் வடநாட்டுச் செலவு மேற்கொண்ட போது இமயப்பகுதியில் முத்தீ வேட்பாளர்க்குக் கேடுவாராமல் உன் செலவு அமையட்டும் என்னும் பார்ப்பான். இனப் பாதுகாப்புப் போன்றவற்றால் மேலும் விளக்கமுறும்.

இறந்தவரின் மக்களுக்கு நீராடச் செய்து பூநூல் இட்டு மந்திரம் ஓதச் செய்தல், 'பிராமணப் பிறவியர்க்கே வீடு பேற்று உரிமை உண்டு' என்று ஏமாற்றும் சடங்காம். அச்சடங்கு முடிந்ததும் நூலை அறுத்து அல்லது எடுத்து எரியில் போட்டுவிடல் வழக்கம். ஏனெனில் அப்பொழுது தவிர்த்து மற்று எப்பொழுதும் பிராமணனாகக் காட்டிக் கொள்ளக் கூடாது அல்லவா!

செத்தவனை வீட்டுலகுக்கு அனுப்பும் கடவுச் சீட்டுக்குப், பார்ப்பான் விரும்பும் அரிசி, பருப்பு, துணி மணி, காசு இன்னும் கேட்பனவெல்லாம் வழங்கல் வேண்டும்!

இவன் சாந்தி அடைந்தால், அவன் வீடுபேறடைவான்!

"இவன் சாந்தி அடையான், எவ்வளவு தந்தாலும்" என்பதைப் பாரதியார், "பேராசைக் காரனடா பார்ப்பான் பிச்சுக் கொடு கொடு எனத் தின்பான்" என்பது சான்றாதல் போதும்!

# 51. தச்சுச் செய்தல்

புதுமனை கட்டத் தொடங்கினால் அதன் தொடக்கம் 'தச்சுச் செய்தல்' என்பர். கல்தச்சர், மரத்தச்சர், சொல்லுத்தச்சர் என்பவர்களால் கட்டட வேலை நடக்க வேண்டும். ஆதலால் தச்சுச் செய்தல் என்பது வழக்கம்.

மனை கட்ட வாணம் தோண்டும் வரையறைக்குள் தென்கிழக்கு மூலையில் ஒரு குழி தோண்டி அதில் வேப்பங்குச்சி ஒன்றனை முளை போல் சீவி ஊன்றி மாலை சூட்டி மஞ்சள் நீர் விட்டு பற்றி (பத்தி) கொளுத்தி சூடம் காட்டி வழிபட்டுத் தச்சுச் செய்தவர்க்குப் பணம் தந்து வாணம் தோண்டுபவரைத் தோண்டச் செய்வதே வழக்கமாம்.

அது பெரும்பாலும் கதிர் வருமுன் தொடங்கிச் சற்றே நேரத்தில் வேலையும் தொடங்கி விடும். வேண்டியவர்கள் அந்நிகழ்வில் கலந்து கொள்வர்.

தச்சுச் செய்தல், 'பூமிபூசை' எனப்பட்டது இப்பொழுது. வாயுசுற்று (வாஸ்து) சாத்திரம் பார்த்தல் என மணப் பொருத்தம் பார்த்தல் போல் பார்ப்பனரை வைத்துச் செய்தலும், நான்கு பக்கமும் சுற்றி ஆநீர் (கோமயம்) தெளித்தலும் உயிர்ப்பலி கொடுத்ததாகக் கடவுளை ஏமாற்றும் வகையில் இலாமிச்சம் (இலுமிச்சம்) பழத்தை வெட்டி, குங்குமத்தில் தோய்த்து நான்கு பக்கங்களிலும் வீசி எறிதலும் செய்வர். தச்சு, மனையடிசாத்திரம் என்பவை ஒழிந்து 'வாத்து' சாத்திரம் என வந்த பின் இடித்து இடித்துக் கட்டப்படும் பழைய மனைகளே பெருகும் போது, புதுமனைகளைச் சொல்வானேன்?

வீடுகட்டி விற்பனை விளம்பரம் செய்வார் 'வாத்து' சாத்திரப்படி கட்டப்பட்ட வீடு எனப் பரப்புகின்றனர்.

கட்டட வரைவாளரும் வாத்து சாத்திர முறைப்படி அமைத்துத் தரப்படும் என்கின்றனர். எல்லாம் பணம்பண்ணும் வேலை! பண்பாட்டுச் சிதைவாம் வேலை!

வாழப் போகின்றவர் வாய்ப்புக்குத் தக இயற்கை வெளிச்சம், காற்று குளிர் வெப்பு இவை நோக்கிச் செய்ய வேண்டிய மனை கோள், இதுகால் மனக் கோளாறு ஆகிச் சுழல்கின்றமை கண்கூடாம் பண்பாட்டுக் கேடாம்.

# 52. புதுமனை புகுதல்

ஒருமனை அல்லது ஒரு கடை அல்லது ஓர் அலுவலகம் திறக்கப்படுகிறது என்றால், காணும் காட்சி என்ன? விளக்கேற்றல், மணம் பரப்பல், வழிபடு தெய்வப் படங்கள், கட்டடம் கட்டிய பொறுப்பாளர் உழைப்பாளர்களுக்குச் சிறப்புச் செய்தல் என்பவை தாமே கடமை!

தலைவாயிலில் ஒரு பட்டு நூல் பட்டை, குறுக்காகக் கட்டப் பட்டிருக்கும். ஒரு தட்டில் பட்டுத் துணி பரப்பி, அதன் மேல் **கத்தரிக் கோல்** ஒன்றிருக்கும்!

சிறப்பு விருந்தினர், வாயில் முன்வர, அவரிடம் தட்டை நீட்ட, அவர் கத்தரிக் கோலை எடுத்துப் பட்டுப் **பட்டையை வெட்டி** உள்ளே நுழைய - மற்றவர்கள் பின்னே நுழைய படம் பிடிக்க, நிகழும் திறப்பு விழா நிகழ்ச்சி நம் பண்பாட்டுச் சிதைவு இல்லையா?

இச்செயலும் ஆங்கிலர் வழி நமக்கு ஏற்பட்டது தானே! மங்கல மகளிர் நீர் நிறை குடம், தேங்காய் பழம், விளக்கு எடுத்து வந்து பால்காய்ச்சி அனைவர்க்கும் வழங்கும் மங்கல விழாவில் கத்தரி போட வேண்டுமா?

நிலையின் இருபாலும் தொங்க விடும் சரமாலையை இணைத்துச் சிறப்பு விருந்தினர் அதனைப் பிரித்து நிலைமாலையாய் விட உள்ளே அனைவரும் புகுந்து விளக்கேற்றலாமே! வழிபடலாமே! சந்தனம் பூசலாமே! பால் பருகலும் விருந்துண்டலும் போதும் அல்லவோ!

சிறப்புச் செய்ய வேண்டியவர்க்கு உரிய சிறப்புப் பொருளைத் தலைவரோ சிறப்பு விருந்தினரோ வழங்கி நம் பண்பாட்டைக் காக்கலாமே! கத்தரித்தலைப் பண்பாட்டுச் சிதைவாக எண்ணத் தோன்றவே இல்லையா?

# 53. மனையமைப்பு

பழங்கால மனையமைப்பு, திண்ணையில்லாமல் இராது. திண்ணையில் தலை வைக்கத்தக்க திண்டு. மாடக்குழி (விளக்குவைக்க) இல்லாமல் இராது.

வீட்டுவாயில் முகப்பில் மிதியடி போட இடம் இருக்கும். தேடி வந்தவரொடு, அல்லது விருந்தினராக வந்தவரொடு உரையாட ஓர் அறை முகப்பில் இருக்கும். வாயிலின் இருபக்கங்களிலும் அறைகள் கட்டலும் உண்டு.

உள்ளே பட்டகசாலை எனப் பெரிய கூடம் அமைப்பர். தென்கிழக்கு மூலையில் சமையல் அறை அமையுமாறு பார்ப்பர். படுக்கை அறை தக்க வகையில் அமைப்பர். வழிபாட்டுப் பகுதியும் வாய்ப்புப் போல் செய்வர்.

அந்நாளில் இல்லாமல் ஆங்கிலர் வரவின்பின் அமைக்கப்பட்டதே கழிப்பறை, குளிப்பறை ஆகியவை. ஆக்கமிக்கதும் தேவையானதுமாம் மாற்றம் இவை.

அன்றும் இன்றும் வீட்டில் அமைக்கத் தவறியதும் தவறுவதும் நூலகப் பகுதி என ஒரு சிறு பகுதிதானும் அமையாமை.

இரண்டு படுக்கை அறை, மூன்று படுக்கை அறை, வழிபாட்டு அறை, பொருள் வைப்பறை, அலுவலக அறை, சமையலறை என அமைப்பாரும் நூல்வைக்க என அட்டளை தானும் வைக்கக் கருதாமை பெருங்குறையாம்.

பழந்தமிழ்ப் புலமையர் கூரைக் குடிசையில் வாழ்ந்தாலும் 'ஏட்டுப் பரணை' வைக்கத் தவறிய தில்லை!

அக்கூரைப் பரணைகளே தமிழ்க் கோயில்களாகத் திகழ்ந்ததால் தான் நம் பண்டைத் தமிழ் வளம் பாதுகாக்கப்பட்டது என்பதை எண்ணின் அக்குறை நீங்கும்.

அலுவல் அதிகாரம் என வந்தபின் வரவேற்பு அறையின் ஒரு பகுதியில் நூலகமும் இடம் பெறல் பாராட்டுக்கு உரியது.

"புத்தகம் ஏற்றுப் பொலிவதே புத்தகம்
பித்தகம் ஆகும் பிற"

என எண்ணலாம்!

# 54. தெருவில் அருவறுப்பு

தெரு என்பதற்குப் 'பொது அருவறுப்பு' என்பது பொருளா? தெரு எதற்காக ஏற்பட்டது?

"ஆறு கிடந்தன்ன அகல்நெடுந் தெரு" என்பதை அறிய வேண்டுமா? சிந்து வெளிப் புதை நகருக்கோ மதுரைக்கோ செல்ல வேண்டா!

திருச்சிராப்பள்ளி மலைக் கோட்டை மேல் ஏறிநின்று காவிரியாற்றை நோக்குங்கள்! உண்மை உங்கள் கண்நேரில் விளக்கமாம்!

சிற்றூர் இடுக்குத் தெருவை முக்கு முடுக்குத் தெருவைப் பாருங்கள்! நடக்குமிடம் காலை நடக்க வைத்தாலும் கையைக் கொண்டு மூக்கைப் பொத்த வைக்கிறதா இல்லையா?

பேரூர் சிற்றூர் என நடைபாதையை 'நரகம் இதுவே' எனக் கிடக்கும் நரகல் குப்பை கூளம் கழிவுப் பொருள் எல்லாம் எல்லாம் பரவியும் குவிந்தும் காட்டவில்லையா?

கழிமுடை நாற்றம் கொட்டுமிடம் குவிக்குமிடம் சிதறிக் கிடக்குமிடம் ஈயும் கொசுவும் உருவாக்கி உயிருக்கு உலைவைக்கும் அல்லவா!

நோய்க்கு இடம் தரும் இடம், ஈ கொசுக்களுக்கு இடம் தரும் இடம் தானே! வீட்டுக் கழிவெல்லாம் கொட்டுமிடம் தெருவா?

உள்ளே மலக் கூடம் இருந்தாலும் குழந்தைகளை வெளிக்குப் போக உட்கார வைப்பது அடுத்தவர் முற்றமா?

அடுக்கு மாடிக் குடியிருப்பர் ஆங்கிருந்து குப்பையை விட்டெறிதல் தான் வானவர் பூமாரி பொழிவதா? ஆற்றங்கரை குளத்தங்கரை போன்றவற்றை ஆடவர் அருவறுப்பாக்க மகளிர் நடைத் தெருவை எவ்வெவ்வழிகளிலோ அருவறுப்பாக்குதல் அறிவும் செறிவும் நாணும் நலமும் ஒருங்கிருக்க வேண்டும் பெண்மைக்குத் தகுமா? தாய்ப்பிறவி என்ன நோய்ப்பிறவி யாக்கவோ வந்தது! தந்தைப் பிறவி என்ன சுற்றுச் சூழலைக் கெடுக்கவா வந்தது.? ஊர்த் துப்புரவாளர் உண்டே எனின், அவர்க்கும் அருவறுப்பும் நோயும் இல்லையா?

தம் கடமையைச் செய்யாமல் பிறர் மேல் சுமத்துதல் இற்றைப் புது நாகரிகம் போலும்!

# 55. சாலைச் செலவு

ஊர்திகள் பெருகிவிட்டன. சாலையும் விரிந்து நீண்டு விட்டன. ஒருவழிச் சாலை அன்றி நால்வழிச் சாலை ஆறுவழிச் சாலை எனவும் விரிந்து விட்டன. எனினும் என்ன?

இந்தியக் கண்டத்துச் சாலை நேர்ச்சிகளில் தமிழ்நாடு முதன்மை இடத்தில் உள்ளதாம்! நல்ல முதன்மை இல்லையா?

ஆங்கிலேயர் காலத்தில் 'கியூ' முறை என்றதை எறும்புச் சாரிமுறை எனப் பெயர்த்ததும் உண்டு! ஆனால் வரிசை போற்றப்படுகிறதா? முந்துதல் முந்துதல், கூடா அளவு விரைவு, குறுக்கும் நெடுக்கும் செல்லல், வலம் பார்த்தும் இடம் பார்த்தும் பக்கம் பார்த்தும் மக்கள் சாலையில் செல்லாமை, சாலை நடையரைப் பார்த்து வண்டி ஓட்டாமை, குடியைக் கெடுக்கும் பெருங்குடியராய் வண்டி ஓட்டல், இடையிட்டு ஓய்வு இன்றித் தொடர்ந்து ஓட்டல், அறிகுறி பற்றிக் கவலைப் படாமல் செல்லலும், வண்டியோட்டலும் நிகழ்தல். அன்றியும் சாலையை விளையாட்டுக்களமும், வணிக நிலையமுமாக்கலும், குழிதோண்டிப் போட்டு மூடாமையும் பிறவும் ஆகிய காரணங்களால் நேர்ச்சி நிகழ்தல், கட்டுக் காவல் இன்மையில் நேர்வன. இவற்றின் கேடுகள் அவ்வவர்க்கேயும் பொதுவுக்கும் கேடாவன. இனிப் பொதுவுக்குக் கேடாவது சாலையோரங்களில் நீர் கழித்தும் மலங்கழித்தும் நாறச் செய்தல்!

நகரங்களைப் பார்க்கிலும் சிற்றூர் வழிகளிலோ தாங்க இயலா அருவறுப்பு! இவ்வருவறுப்புகளைச் சாலையில் செய்வாரைப் பாருங்கள்? ஆண்களா? பெண்களா? இருவருக்கும் கழித்தல் ஒப்பானது தானே!

பெண்கள் சாலையை இவ்வழியில் கெடுக்க மாட்டார் எனினும், வேறு வழியில் கெடுத்தல் இன்னோர் கட்டுரைக் குறிப்பில் காணலாம்! 'தெருவில் அருவறுப்பு' என்னும் தலைப்பைப் பாருங்கள்! ஆற்றுக்குப் போதல் குளத்துக்குப் போதல் வெளிக்குப் போதல் என்பவற்றின் வளர்ச்சி சாலையை அருவறுப்பாக்கலாம்! "வெளியே வந்தால் உள்ளே போகும்" பண்பாடு என்று தான் வருமோ?

# 56. இளங்கொடி கட்டல்

எருமை பசு ஆயவை கன்று போடுகின்றன. கன்றைச் சூழவும் தண்ணீர்க் குடம் என்னும் இளங்கொடி இருக்கும். அதனை உடைத்துக் கொண்டே கன்று வெளிப்படும். அதன் கொடி மாட்டின் பிறப்புவாய் உறுப்பில் தொங்கிக் கொண்டிருக்கும்.

மாடு கன்று ஈன்று இரையெடுத்து நீர் குடித்து அதன் பின்னரே சிறிது சிறிதாக வெளிவரும். முழுவதாக வெளிவரும் வரை தொங்கிக் கொண்டிருக்கும். நாய் அதனைப் பற்றித் தின்ன வாய்ப்பு உண்டு. அதனால் பாதுகாப்பாகப் பார்த்துக் கொண்டிருந்து இளங்கொடியை எடுக்க வேண்டும்.

எடுத்த இளங்கொடியைத் தோட்டம் தோப்பு மரங்களில் கட்டார். எவர் மரத்திலும் கட்டவும் இயலாது. குப்பைக் குழிக்குள் புதைத்து வைத்து, அல்லது குழிதோண்டிப் புதைத்து வைத்து மட்கிப் போக விடலாம். உரமாக்கலாம். அதனைச் செய்யார்.

"பால் மரத்தில் இளங்கொடியைக் கட்டினால்
ஈன்ற மாட்டில் பால் சுரக்கும்"

என்றோர் பழமொழி உண்டாயிற்று.

தென்னையில் தேள் கொட்ட புன்னையில் நெறிகட்டுமா? இதற்கும் அதற்கும் என்ன தொடர்பு? பசுமாட்டு அல்லது எருமைமாட்டுப் பாலுக்கும், கள்ளிப்பால், அரசம்பால், ஆலம்பால் முதலியவற்றுக்கும் என்ன தொடர்பு?

கண்மூடித் தனம் பொதுமைக் கேடு என்பவை அன்றி வேறு தொடர்பு இல்லை. பால் மரங்களாம் கள்ளி கற்றாழை, ஆலமரம் அரசமரம் ஆகியவை பொது இடங்களில் சாலைவழிகளில் வளர்வவை. அவற்றில் கட்டினால் எவரும் தம் உரிமை காட்டித் தடுக்க மாட்டார். தடுத்தால், "உன்மரமா? நீ உரிமை கொண்டாட!" எனக் கேட்கலாம். அதனால், தம் மரங்களிலோ, தனிப்பட்டவர் வளர்க்கும் மா, பலா, வேம்பு வாகை முதலிய மரங்களிலோ இளங்கொடியைக் கட்டுவது இல்லை.

முத்திரை வைத்து எழுதித்தரப்பட்ட கண்மூடித்தன ஆவணமாய் பொதுமை அழிப்புக் கல்லெழுத்தாய் நாட்டில் நடந்து கொண்டே இருக்கிறது இச்செயல்!

## 57. சிலை நிறுவுதல்

சிலை நிறுவுதல் உலகப் பொது வழக்கு. நம் பழவழக்கும் கூட. ஆனால், சிலை நிறுவுதல் எங்கே? போக்குவரவுக்கு இடையூறான இடத்திலா நிறுவுவது? சிலையை ஏன் நிறுவுகின்றனர்? போற்றத் தக்கவர் என்பதற்காகத் தானே? போற்றத் தக்கவர் சிலைகள் பல தூற்றத்தக்க வகையில் சிதைந்து இடிபட்டுக் கிடப்பதும் முக்காடு போட்டு மூடிக்கிடப்பதும் ஏன்?

நிறுவ வேண்டும் இடத்து – எவருக்கும் இடையூறு இல்லா இடத்து – பூங்கா, பொதுமன்று – சுற்றுவளாகமுடைய இடம் ஆயவற்றில் அமைக்காமை தானே, அடிப்படை அழிவுக்கும் அழிப்புக்கும் மூலம் குடியரசு ஆனபின் சிலையில்லாச் சிற்றூர் உண்டா? பேரூர் உண்டா? நகர், மாநகர் உண்டா?

ஊருக்கு ஒருவருக்கு ஒரு சிலை போதாதா? நோக்கு மிட மெல்லாம் சிலையா? கோயில் கட்டிச் சிலை வைத்தார்கள்! ஊர்ப் பொது இடத்தில் ஒரு வளாகம் அமைத்து வழிபட்டுக் கோயில் எழுப்பல் வழக்கம். அவற்றால் போக்கு வரவுக்கு இடையூறு இராது. ஊரவர் அனைவர்க்கும் பொதுவானது. ஊரவர் அனைவரும் கடமைப்பட்டவராய் இருந்தனர்.

கட்சித் தலைவர்கள் சிலை – தென்னாட்டிலே, தென்னாட்டவர்க்கு அன்றி வட நாட்டவர்க்கு நாட்டும் சிலைகளே மிகுதி! அதில்தான் தேசியம் இருக்கிறதாம்? வடநாட்டில் ஏன் தென்னாட்டவர் சிலை இல்லை. தென்னாடு தேசியம் சார்ந்ததாக வடநாட்டவர் கொள்வதில்லை. தென்னாட்டவர்க்குத்தான் அப்படி ஒரு வெறி – காதல்!

சிலைமட்டுமில்லை! நெருக்கடியான இடங்களிலே உடலைப் புதைத்து சமாதி – சுவர் – கூடம் அமைத்தல்! பொதுக்கேடு என்பது புரியாதா? சிலைக் கிறுக்கு தமிழ்நாட்டுக் கட்சிகளுக்கு உள்ள

சின்னத்தனமான பற்று. அது நாட்டையே சீரழிக்கும் சிறுமையைச் செய்வது கண்டும் சிலை நிறுவதை விடுவது இல்லை! முட்டியும் அறியா மூடமாய் முட்டலில் முதல் பரிசு தமிழ் நாட்டுக் கட்சிகளுக்கே தரலாம்! இந்தத் தலைவர்கள் எல்லாரும் வானத்தில் இருந்து வந்தவர்களாகப் பேயாடும் கூட்டம் இருக்கும் வரை சிலைச் சீரழிவாம் பண்பாட்டுக் கேடு நின்று தொலையாது! சிலைகளால் ஊரில் உண்டாகும் சீரழிவுகளும் ஒழியாது!

## 58. உலகவகை முதலியவை

கி.பி. 21ஆம் நூற்றாண்டு – விழிப்புமிக்க நூற்றாண்டு. கி.பி. 16 ஆம் நூற்றாண்டுமுதல் மேலை நாடு விழித்துக் கொண்டது.

அறிவியல், பொருளியல், அரசியல், கலை இயல், பற்பல துறை இயல்கள் என விழித்துக் கொண்டு வளர்ந்து வருகின்றது. அறிவியல் பெயரால் அழிவியலும் சுரண்டலும் பண்பாட்டுக் கேடும் மிகவும் செய்கின்றன.

ஆனால் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, மொழியும், வழியும், ஆட்சியும், துறையும், பண்பும், மெய்யியலும் வளர்ந்த நாடு தமிழ்நாடு!

வளர்ந்த நாட்டுக் கெல்லாம் மூலவளமாக இருந்தநாடு – உலக வலம் வந்த நாடு – அறிவுமிக்க நாடு – தொல்காப்பியர் காலம் தொட்டே வேதியம் புகுந்த நாடாயிற்று. வேள்விக்குள் புகுந்த நாடாயிற்று. வேதியத்தின் பின் அரசும் செல்லும் நிலையும், தமிழர் ஒற்றுமை இல்லாமையால் அயலார் ஆட்சியும் ஆகித் தன் பண்பாட்டைப் பெரிதும் இழந்து போயிற்று; தன்னறிவு – பகுத்தறிவு என்பவை இழந்த மூடத்திற்கு முழுதுற அடங்கி அடிமைப்பட்டுப்போனது.

வள்ளுவர் வந்தென்ன? வள்ளலார் வந்தென்ன?

வேதியக் கொத்தடிமையாக மக்கள் அழுந்திய சேற்றுள்

வீழ்ந்து கிடக்கின்றனர்.

மேலேழு உலகமாம்! கீழேழு உலகமாம்! நரகமாம்! பாற்கடலாம் தயிர்க்கடலாம் மோர்க்கடலாம் நெய்க்கடலாம் கருப்பஞ்சாற்றுக் கடலாம் வைகுண்டமாம் சிவலோகமாம் யமனாம் தூதனாம் வழுவாய்க்குக் கழுவாயாம் – ஊருக்கும் தெய்வத்திற்கும் ஆற்றுக்கும் கதை கதையாம்! பூசையெல்லாம் தெய்வமொழியாம்! தெய்வப்பிறப்புப் பிறந்தவராம் வேதியர்! பிறரெல்லாம் சூத்திரராம்!

தன்னினம் பிழைக்கவே நூல்கள்! அடிமைச்சூத்திரரும்
ஆமாம் என ஒப்புக் கொண்டு பாடிய புராணங்கள்!
ஏமாற்றுவான் மேல் என்ன குற்றம்?
ஏமாறிக் கிடப்பவன் குற்றம் தானே!
இற்றைக் கேடு ஏமாறியே ஏமாறிய துணராமல் பிறரையும்
ஏமாறச் செய்யும் இழிமை தான்!

தமிழர் விழிப்படையாமல் – விழித்து ஒன்றுபட்டு நில்லாவிடின், அவன் வேதியக் கொத்தடிமையே – இந்தியக் கொத்தடிமையே! ஆங்கில – திரவிடக் கொத்தடிமையே! அவனுக்கெனக் கையகல நாடும் இல்லை! விரல் அளவு மானமும் உண்டாகப் போவதும் இல்லை!

## 59. இலவயக் கேடு

உழைப்பைக் கெடுக்க எந்தச் சோம்பனும் மடியனும் வேண்டா! வேளாண்மையை ஒழிக்க – வேலை செய்யும் உழைப்பாளியை ஒழித்து முழுக்குடியனாக்கிக் குடியையே கெடுக்க – அரசே பொறுப்பு எடுத்துக் கொண்டது!

ஏழைப்பிள்ளைக்குப் பள்ளியில் ஒருவேளை உணவு எனத் தொடங்கிய தொடக்கம், அயிரை மீன் போல் தெரிந்தது. இப்பொழுது இலவயத் திமிங்கிலம் உழைப்பு மிக்க வலிமைமிக்க – யானையையே முடமாக்கிப் போக முழுதும் அழிந்து போகச் செய்து விட்டது!

"அள்ளித் தருவதாகக் காட்டுவதெல்லாம், கொள்ளி நீட்டுவது"

என்பதைக் கையேந்திப் பழக்கப்பட்டுப் போன மானங் கெட்டவர்கள், எண்ணுவார்களா?

"ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்கிறேன்
என்றானாம் தருமன்!"

ஒருவன் கேட்டானாம், "அவ்வளவு பிச்சைக்கார நாடா உன்நாடு?" என்று! இப்பொழுது கோயில்களில் நாள்முழுவதும் அன்னதானத் திட்டமாம்! தொடக்கம் திருவரங்கம், பழனி (13.09.2012) இனிமேல் எங்கெங்கும் தமிழ்நாடு முழுதுறு பிச்சைக்கார நாடு ஆகிவிட்டது, அன்று! ஆக்கப்பட்டு விட்டது! உழவனும் பிச்சைக்காரனே!

இலவசம் மானக் கேடுமட்டுமா? உழையாமையால் உடற்கேடு - உழையா வருவாயால் குடிப்புக் குடித்துக் குடியைக் கெடுக்கும் கேடு! அக்குடி வருவாயில் கொள்ளையடிக்கும் ஆட்சி உரிமை மீளப் பெறல் எனப்பல அடுக்குக் கேடுகள்! மதுக்குடியால் வரும் வருமானமே இலவசம் என எண்ணும் "சின்ன அறிவு" இருந்தால், மதுக்கடையை மக்கள் திறக்கவிடுவார்களா? அக்கடைக்குள் போக விடுவார்களா?

கட்சிக்காரர் செய்ய வேண்டியது என்ன? சாதிக் கட்சியர் செய்யவேண்டுவதென்ன? என் கட்சியில் இருப்பவன் என்சாதிக் காரன் என்பவன் குடியாதே! குடித்தால் என்முன் நில்லாதே! பின்னும் வராதே! என்று தொண்டு செய்ய முன்வருவரா? வரார்! ஏனெனில் அவர்கள் கட்சியில் குடியாதவர்களை விரல் விட்டு எண்ணத் தானே வேண்டும்! கட்சி நடத்த முடியாதே அவர்களை விட்டுவிட்டு!

# 60. ஊடகக் கேடு

செய்தித்தாள் - தொலைக்காட்சி - தொலைபேசி - இணையம், ஆகியவை எல்லாம் அறிவாளர் கண்ட அரிய ஊடகங்கள்! ஆனால், அவற்றைப் பயன்படுத்துவாரோ பண்பாட்டைக் கெடுக்கவே பிறந்த பாழும் பிறவிகள்!

நொடிப்போதில், மயங்கிக்கிடப்பவனை நீரைத் தெளித்து எழுப்பலாம்! நொடிப்போதில், ஓடித் திளைப்பவனை நஞ்சால் சாகடித்து விடலாம்!

ஆக்க ஊடகம், அழிவுக்கும் ஆவதே!
பயன்படுத்துவார் உள்ளம் தேனானால் இனியதே!
பயன்படுத்துவார் உள்ளம் தேளானால் துடிப்பதே!

உலகக் குப்பையை - சாய்க்கடையை - எல்லாம் ஒருங்கே கொட்டி வீட்டையும் நம் பண்பாட்டையும் நாறடிக்கவே வந்ததோ என்னும் தொலைக் காட்சி! திரைப்படம் எனின், தேடிப்போக வேண்டும்! தேடாமல் கொழிக்கிறது வீட்டுள் சேற்றை! சந்தனம் பூசுவதாக அமர்ந்து பார்ப்பவர், நம் பண்பாட்டுச் சீரழிவை எண்ணுவார்களா? **எண்ணினால் மகளிர் மன்றங்கள், பெண்களைப் படுத்தும் இழிமையைக் கண்டு கொதித்தெழாதா? அதுவே குந்திக்கிடக்கிறதே எழுபவர் எவர்?**

பட்டிமன்றம் - வழக்காடு மன்றம் - அரட்டை அரங்கம் பண்பாட்டுக்கு நடத்தப்படுவனவா?

ஊடகம் பண்பாட்டை உண்டாக்கினால் எந்த நூலும் - எந்தப் பொழிவும் - எந்த அறவுரையும் தேவையில்லை!

ஊடகம் கெடுக்கும் கெடுதல்கள், எத்தனை ஆயிரம் தோன்றற் கரிய தோன்றல்கள் தோன்றினாலும் தொண்டாற்றினாலும் தோற்றுப் போகவே செய்வர் என்பது மெய்யாம்!

இதற்கிடையே பண்பாட்டை உண்டாக்கும் செய்திக் காட்சி தரும் ஊடகப் பகுதி உண்டாயின், அதும் நஞ்சுக் குடுவையில் விட்ட நறுந்தேன் துளி போல் தானே ஆகிவிடும்! அந்நேரமும் அக்காட்சியைக் காணமாட்டார்களே இப்பண்பாட்டுச் சிதைவை எண்ணாதவர்கள்!

# 61. பெற்றோர்மேல் ஆணையாக

நீயில்லாமல் நானில்லை என்று மெய்யாகச் சொன்னால் அவர்கள் தாய் தந்தையரே! அவர்க்கு அவர் முந்தையரே!

உயிர் வித்தாகிய அவர்கள் உயிர் உள்ளவரை பேணல் உயிரைப்பெற்ற ஆறறிவுப் பிறவியின் கட்டாயக் கடமை அதனாலேயே. பள்ளி புகுந்த நாள் தொட்டே அறியுமாறும் போற்றுமாறும் கருதிய ஔவையார்,

"தந்தை தாய்ப் பேண்"

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"

என்றார்!

மழலையர் வாயில் தேனாக வந்தது தானாகவோ ஒழிந்தது? ஒழியச் செய்தவர் "எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என முழங்கி, அரியணையில் ஏறித் தமிழை ஒழிக்கவே ஆங்கிலப் பள்ளிகளைத் திறந்து, தமிழ்ப்பள்ளிகளை மூடியவர்கள்! இருக்கும் தமிழ் வழிப்பள்ளிகளையும் ஆங்கில வழியில் ஆக்கியவர்கள்!"

பெற்றோரைப் பேணாமை செய்ந்நன்றி கொன்ற பாவத்திலும் பாவம்!

தம் கண்ணாய், கண்ணின் மணியாய்
தம் ஊனாய், உயிராய்
தம் வாழ்வாய், வளமாய்

வாழச் செய்த கண்கண்ட தெய்வங்கள் மேல் ஆணை, அவர்கள் நல்வழிகளுக்கெல்லாம் நாம் துணை நின்று காலமெல்லாம் காத்தலாம்!

தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை!
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை!
தாய் சொல் துறந்தொரு வாசகம் இல்லை!

இப்பாட்டுக்கு மாறாம் மெய்ச்சான்றே "முதியோர் இல்லங்கள் ; ஏதிலியர் இல்லங்கள்!"

# 62. பேசும் மொழியின் மேல் ஆணையாக!

தாய் பேசிய மொழி தாய் மொழி! தாய்மார் பலப்பலர் எனினும் தமிழத்தாயர் பேசிய வாய்மொழி தமிழே! என்தாய் தந்த 'தேட்டு' என் மொழி! தமிழ் மொழி!

தாய் வயிற்றில் உணவுடன் உணர்வும் ஊட்ட அறியாதே அறிந்த, உயிர்மொழி என்தமிழ் மொழி! இதனை வாழ வைத்தல் என்பிறவிக் கடமை!

நான் எம் மொழி கற்றாலும் கற்பேன்!

எத்தனை மொழி வேண்டுமானாலும் கற்பேன்!

ஆனால், என் தாய் மொழியே என் உயிர் மொழி!

அதனைக் கற்காமல் எத்தனை மொழிகளை

நான் கற்றவன் ஆனாலும் கற்றறி முழு மூடன்!

தாயைப் புறக்கணித்து ஆயிரம் தாய்க்கு உதவினாலும் நான் தாய்க் கொலையனே!

"என் மொழியின் மேல் ஆணை! என் தாயின் மேல் ஆணை! என வாழ்பவனே தமிழன்! முழங்குபவன் அல்லன்!"

வேறு வேறு சொல்பவன் தமிழப் போலி!

தமிழினத்தைக் கெடுக்கப்பிறந்த கயமைப் பிறவி!

எவ்வளவு புலமை இருந்தாலும்!

எத்தனை புதுமை கண்டாலும்!

போலியில் போலியே அவன்!

## 63. பிறந்த மண்ணின் மேல் ஆணையாக!

நான் பிறந்த மண் தமிழ் மண்!

நான் உண்டு உடுத்து வளர்ந்த மண் இந்தமண்!

ஆறறிவுப் பிறப்பியாகக் கற்பித்ததும் இந்தமண்!

இந்த மண்ணில் இருந்து நான் பெற்றுள்ள கடன் பெரிது!

இந்த மண்ணுக்கு நான் செய்து தீர்க்க வேண்டிய கடனோ மிகப் பெரியது!

என் மண்ணை மதிப்பேன்!

எந்த மண்ணில் நான் வாழ்ந்தாலும்

இந்த மண் இல்லாமல் நான் இல்லை! என்வாழ்வில்லை!

எந்த மண்ணுக்கும், நான் வாழ்தற்கு வாய்ப்புத் தரலால்

நன்றிக் கடன் உடையேன் தான்!

ஆனால், அந்த மண்ணுக்கு வந்து நான் கடனாற்ற என்னைத் தந்த - பிறந்த - இந்த மண்ணினும் அந்தமண் ஏற்றமிக்க தாகி விடாது!

என் மண்ணை - என் இனத்தை - என் மண்ணின் மொழியை என்னால் எவ்வளவு தூக்கி எடுத்து நிறுத்தமுடியுமோ அதைச் செய்வதே என்பிறவிக் கடன்!

"புகுந்த மண்ணுக்கு வஞ்சமில்லாமல் உழைத்து

பிறந்த மண்ணுக்கு ஆற்ற வேண்டுவ ஆற்ற

மண்ணின் மகவாகத் திகழ்வதே என் பிறவிக் கடன்"

என்னும் பிறப்பே தமிழ்ப் பிறப்பு! அப்பிறப்புகள்

உலகியல் உணர்ந்து வழிப்பட வகையாகும்! ஆதலால்

இரட்டை நலம் ஆகும்!

உன் மண்ணும் உலக மன்றில் ஒரு மண்ணாக

மதிக்கப்படும்! ஓரினம் - ஒரு கையகல மண்ணும்

இல்லாத இனம் - உலகில் தமிழ் இனம் மட்டுமே!

உலகின் மூத்த இனம் அது என்பது இன்னும் வெட்கக்கேடு!

# 64. நல்லரசின் கடமைகள்

நாடென்ப நாடா வளத்தன - ஆக்குதல். அதற்குமுன் வீடென்ப வீடா வளத்தன - ஆக்குதல். அதற்கு வழியென்ன? வள்ளுவர் காட்டுகிறார் வழி! இறை மாட்சிக்கு அடுத்த அதிகாரம் கல்வி!

கல்வி கட்டாயமாக எல்லாருக்கும் தரவேண்டும்!

கட்டாயக் கல்வியும் காசில்லாக் கல்வியாதல் வேண்டும்!

உழுவார் உலகத்தாருக்கு ஆணி!

உழவினார் கைம் மடங்கின் துறவரும் வாழார்!

உழவர்க்கு உழைப்புக்கு வேண்டுவ செய்தல் வேண்டும்

உழைப்பைக் கெடுக்கும் இலவசத்தை நிறுத்த வேண்டும்

படித்தவர்க்கு வேலை இல்லை என்ற நிலை நாட்டில் இருக்கவே கூடாது.

உழைப்பு என்றால் செந்தணப்பு அறையில் (A.C) இருந்து பார்க்கும் வேலை மட்டுமில்லை! அவரவர் நிலைக்குத்தக்க வேலை! அவர்குடும்பம் எவரையும் எதிர்பாராமல் எதனையும் எதிர்பாராமல் வாழும் நிலைக்கான வேலை!

எவருக்கும் நோய் வரும்! நோய்வராமல் தற்காக்க வேண்டும் தற்கடமை! வந்து விட்டால் காசில்லாமல் மருத்துவம் செய்யும் அரசின் கட்டாயக் கடமை?

மதுவகை படிப்படியாகக் கொல்லும் நஞ்சுகள்! அவை எவ்வகையிலும் நாட்டில் தலை காட்டவிடாத ஆளுமை! மீறினால் விலக்கு இல்லாமல் தண்டனை! அவ்வுருவாக்கமும் வரத்தும் இல்லாமல் அறவே களைதல்!

பரிசுச் சீட்டு - குலுக்கல் சீட்டு - குதிரைப் பந்தயம் - கையூட்டு கடத்தல் ஒழிப்புக்கே அரசு காவல் கடமை கொண்டது!

இவற்றை மக்களிடம் தூண்டிக் கொள்ளையடிப்பது அரசாகாது! குடி கெடுக்கத் தடி எடுக்கும் அரசு அது! எங்கும் அவ்வம் மாநில மொழியே ஆட்சி மொழி, ஆணை மொழி, முறை மன்ற மொழி, கல்வி மொழி,

இசைமொழி, வழிபாட்டு மொழி! அப்படிச் செய்யும் அரசே 'எங்கும் தமிழ் எல்லாம் தமிழ்' என்று சொல்லும் மானமுடைய அரசு! தொடர்புக்கு நாட்டுமொழிகள் அனைத்துக்கும் ஒத்த உரிமை! நல்லரசின் கடமைகள் இவை.

## 65. நற்குடிகளின் கடமைகள்

நல்ல குடிப் பிறப்பு என்பது நல்லொழுக்கப் பிறப்பு;
நல்லொழுக்கத்தில் தலையாயது மாந்த நேயம்;
மாந்த நேய வளர்ச்சியே ஆன்ம நேயம்!

ஆன்ம நேயம் உடையவனே இறைநிலையன் - வாழ்வாங்கு வாழும் வாழ்வினன்!

தன்வாழ்வில், எவரையும் உயர்வு தாழ்வு கருதாமை!
எவருக்கும் பாரமாகச் சோம்பி வாழாமை!
எவரிடமும் கையேந்தி நில்லா மானவாழ்வு வாழ்தல்!
எந்த அளவால் பிறர்க்கு உதவியாக – வழிகாட்டியாக – வாழ முடியுமோ அவ்வளவு வழி காட்டி வாழ்தல்!

பிள்ளைகளைத் தம்மினும் மேம்பட வளர்த்து வேண்டுவ புரிதல்; பெண்ணும், ஆணும் ஒருவருக்கு ஒருவர் துணை நலம் என வாழ்தல்; பெற்றோரை மதித்துப் பேணிக் காத்தல்.

எடுத்த தொழிலைத் தொய்வின்றி முடித்தல்; பொதுக்கடமை புரிதல். உரிய பொழுதில் நம் மக்களிடம் பொறுப்பை ஒப்படைத்து வழிகாட்டி உதவியாக வாழ்தல்.

ஆட்சிக்கு வருவாரைச் சாதி இனம் கட்சி எனப்பாராமல் தக்கோரைத் தேர்ந்தெடுத்தல்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர் தவறின் திருத்துதல் - பதவியைப் பறித்தல்!

ஒவ்வோர் இனமும் தன்னுரிமையோடு வாழும் அரசாக - அல்லது ஒன்றை ஒன்று மதிக்கும் கூட்டரசாக விளங்கச் செய்தல்.

பல இனம் கூடிய நாட்டிற்கு அவ்வவ்வினத்தவர் நலனுக்குக் குரல் கொடுக்கும் உறுப்பாண்மை உலக நாட்டு அமைப்பில் உருவாக்கல்!

நாட்டு நலத்தில் அனைவர்க்கும் பங்குண்டு என்னும் கடைப்பிடியாளியாக அனைவரும் இருத்தல்!

"தீதும் நன்றும் பிறர்தர வாரா"

என்பது ஆணை மொழியாகக் கொண்டு வாழ்வாங்கு வாழ்தல் இவை நற்குடிகளின் கடமைகளாம்.

## 66. ஒப்புரவு

ஒருவர் செல்வர் எனினும் வறியர் வீடுகட்டினால். ஊரே அதில் ஈடுபட்டுச் செய்யும். வண்டியிருப்பவர் தம் வண்டியால் கல் மண் செங்கல் மரம் எனக் காசு வாங்காமல் தாமே முன்வந்து உதவுவார். அவை இல்லாதவர் இரண்டு நாள் மூன்று நாள் பணம் வாங்காமல் வேலைபார்ப்பார்.

வீடு கட்டுபவர் வறியர் எனின் தட்டை, தாள், கம்பு, வரிச்சு, வளை என இலவசமாக அவற்றை இருப்பவர். கேளாமலே தந்து உதவுவர். கூலி வேலை செய்பவர்களும் கூலிவாங்காமல் சுவர் வைத்தல் கூரை வேய்தல் என இயன்றதைச் செய்வர்.

ஒரு வீட்டுத் திருமணம் என்றால் ஊரவர் அனைவரும் பங்கு கொள்வர் பந்தல் போடல், சமைத்தல், பந்தி வழங்கல், தத்தம் வீடுகளில் விருந்தினர் தங்க வைத்தல் என வேண்டுவ வெல்லாம் புரிவர்.

ஒரு பெண் பூப்படைந்திருந்தால் ஊரார் அனைவரும் கூடி விழா எடுப்பர். ஊட்டமிக்க உணவு வீடுவாரியாகச் செய்து வழங்குவர்.

ஒரு வீட்டில் துக்க நிகழ்வு என்றால் ஊரே அன்று வேலைக்குச் செல்லாமல் இறந்தவரை எடுக்கும் வரை கூடி இருந்து செய்வன செய்வர். இடுகாடு சுடுகாடு ஆயவற்றில் ஆகும் செலவுக்கு எனச் சிறு சிறு தொகைகளை வழங்குவர்.

அயலூரிலிருந்து ஒரு துக்கச் செய்தி வந்தாலும், ஊரில் ஒரு திருமணம் நடந்தால் வெளிப்படச் சொல்லாமல், உரியவர்க்கு மட்டும் அறிவித்து ஊரறியாமல் மறைத்து மங்கலவிழா நடக்க உதவுவர்!

தம் ஊரில் நடந்த துக்கத்திற்கு அயலூரில் இருந்து வருவார்க்கு உணவும், தங்குதல் இடமும் தம்வீட்டிலேயே வழங்குவர்.

ஊர்ப் பொதுச் சாவடியில் இரவுப் போதில் அயலார் வந்து தங்கினால் அவர்கள் பசியோடு இருக்கக் கூடாது என்று தருமச் சோறு என ஊருள் வாங்கிக் கொண்டு வந்து பசியாற்றி, விடுப்பர்.

வெளியூரில் இருந்து இசையோடு பாடிப்பொருள் கூறும் புலவர்கள் வந்தால் அவரை ஊர் உணவு தந்து பேணி, ஒவ்வொரு நாளும் கதையும் பாட்டும் உரையும் சொல்லச் சொல்லி நிறைவில் விழா எடுத்துப் பணமும் வழங்கி அனுப்பிவைப்பர்! வேட்டி துண்டு பழம் என வழங்குவதும் உண்டு.

இவையெல்லாம் பொது நிலைச் சமுதாய ஒப்புரவுகள்!

இவற்றின் தடம் கூட மறையும் நிலை ஏற்பட்டமை பெரிய பண்பாட்டுச் சிதைவாகும்.

## 67. பொங்கல் விழா

பொங்கல் விழா இரண்டு வகைப்படும். ஒன்று தைப் பொங்கல் விழா; அது தமிழகப் பொதுவிழா. மற்றொன்று ஊர்ப் பொங்கல் விழா; அது, ஊரூர் தோறும் அவர்கள் குல தெய்வ வழிபாடாகச் செய்யப்படுவது.

பொங்கல் அழைப்பு எனப் புது மாப்பிள்ளை, புதுப்பெண்களை அழைத்தலும் சிறப்புச் செய்தலும் வழக்கம். ஊரில் எல்லாரும் பங்கு கொள்ளும் விழா பொங்கல் விழா. சிறுவர்கள் விளையாட்டு, ஆட்டம் பாட்டம், சூந்து சுற்றுதல் என நிகழும்.

பெண்கள் கும்மி, கோலாட்டம் என நடத்துவர். ஆண்கள் சிலம்பம், சடுகுடு, மற்போர் என நடத்துவர். கரகாட்டம் பொம்மலாட்டம் எனவும் பாட்டிசை, நாடகம், பொய்க்கால் குதிரை என்பனவும் நிகழும்.

பொங்கல் விழா என்பது 'கலைவிழா' எனத்திகழும். ஊர்ப்பொதுவில் கோயில் வளாகத்தில் பொங்கலிடலும், கோயிலில்

குளுமை சொரிதலும், மாட்டைக்குளிப்பாட்டிக் கொம்புகளுக்கு வண்ணம் தீட்டலும், சல்லி கட்டு, வண்டி யோட்டப் பந்தயம் என்பனவும் உண்டு.

முதியவர்கள் பதினைந்தாம் புள்ளி, தாயம் என விளையாடுவர். இவற்றில் எதுவும் போட்டி பொறாமை சண்டை ஏற்படா. பல ஊராரும் கூடுதல் மகிழ்தல் விருந்துண்ணல் பெண் பார்த்தல் என்பனவாகவே இருக்கும். இளைய காளையர் இளவட்டக்கல் தூக்கித் திறம் காட்டலுண்டு.

இப்பொழுது ஒலி பெருக்கி போட்டுச் செவிப் பறை கிழியச் செய்தலும், அதற்குமேல் வெடிபோட்டுச் செவிடாக்கலும் ஆய்விட்டன. சாதி கட்சி என்பவை முட்டிமோதும் விழாவாகவும் பொங்கல் விழா ஆகிவிட்டமை பெருங்கேடாம்! எதனால் மகிழ்வும் ஒருமைப்பாடும் ஓங்கினவோ அதனாலேயே ஊரும் உறவும் பிளவுபட்டுப் போதலும் வெட்டு குத்து நடத்தலும் பெரும் பண்பாட்டுச் சிதைவு அல்லவா!

## 68. கூட்டுக் குடும்பம்

ஒரு கணவன் மனைவி அவர்கள் மக்கள் என்னும் குடும்பம் ஒரு "தலைக்கட்டு" எனப்படும். அது தனிக்குடும்பம். ஒரு குடும்பத்தில் பலர் பிறந்து, அவர்களும் மணம் புரிந்து மக்களைப் பெற்று, அவர்கள் தாய் தந்தை, பாட்டன் பாட்டி மக்கள் பேரர் எனச் சோற்றுப் பிரிவும் சொத்துப் பிரிவும் இல்லாமல் வாழும் குடும்பம் கூட்டுக் குடும்பமாகும்.

குடும்பத்தில் மூத்தவர் சொல் கேட்டுக் குடும்பத் தொழிலும் பிற நிகழ்ச்சிகளும் நடைபெறும். அம்மூத்தவரும் தம் தகுதியை உணர்ந்து குடும்ப நலம் கருதிய ஒப்புரவாளராய், நடுவுநிலை போற்றிக் காப்பவராய்த் திகழ்வார். சிறு சிறு கருத்து வேறுபாடு ஏற்பட்டாலும், பெரியவரை மதித்து அவருக்குப் பணிந்து குடும்பம் விளங்கும்.

சமையல் ஓரிடத்து நடந்தாலும், ஒவ்வொரு தலைக் கட்டுக்கும் தனிப்பகுதியும் அவர்கள் உண்டு உறையும் வாய்ப்பும் உண்டாக்கிக் கொள்வர். ஆதலால், அவரவர்க்கு வேண்டும் உணவை எடுத்துச் சென்று

உண்பதும் உறைவதும் கூட்டுக் குடும்பம் எனினும், தனியுரிமைக்குப் பாதிப்பு இல்லாமலும் பொதுக்குடும்பத்திற்குச் சிக்கல் இல்லாமலும் நிகழலாயின. கூட்டுக்குடும்ப வாழ்வு ஒரு தனிச் சிற்றூர் வாழ்வு போன்றது. பண்பாட்டு வாழ்வுக்குப் பயிற்சிக் கூடம் போல் விளங்கியது. இல்லுறை தெய்வமாக முதியவர்கள் போற்றப்பட்ட பெருமையது. அந்நிலை பெரும்பாலும் மாறிவிட்டது.

பெற்றோர் மக்கள் தனித்தனி வாழ்தலும், மக்கள் வெளிநாட்டு வேலைக்குச் செல்லுதலால் பெற்றோர் தனித்து வாழும் நிலையும், முதியோர் இல்லங்களை நாடும் நிலையும் உண்டாகியமை கண் கூடு. இதனால் முதியர் பெரும்பாலும் பேணுவார் இல்லாமல் மன உளைச்சலுக்கு ஆட்பட்டு வாழும் நிலையை எண்ணின் நாகரிக வகையால் ஏற்பட்டுள்ள பண்பாட்டுச் சிதைவு புலப்படும்.

# 69. வாழ்க

வாழ்த்துதல் நம் பண்பாடுகளுள் தலைப்பட்ட ஒன்று. வாழ்த்துதலும் வாழ்த்துப் பெறுதலும் இன்பச் சுரப்புகள். வேந்தரைக் காணும் போதும் வாழ்த்து; பிரியும் போதும் வாழ்த்து.

மறுதலைப்பட நடந்துகொண்டாலும், வாழ்த்திப் பிரியும் உயர் பண்பாடு! அம்மறுதலையால் கேடு விளையக் கூடாது என்னும் பேரெண்ணம்! வசையையும் இசையாக்கும் வாழ்வியல் வளம் வாழ்த்து!

ஐங்குறுநூற்றில் ஏறத்தாழச் செம்பாதிப் பாடல்கள் வாழ்த்தில் தொடங்குவன. முதல் பத்தே வாழி யாதன் வாழி அவினி என்பது 'அன்னை வாழி' என்பது பல பத்துகள்.

கடவுள் வாழ்த்து, நாட்டுவாழ்த்து, மொழிவாழ்த்து, சான்றோர் வாழ்த்து, பிறப்பு வாழ்த்து சிறப்பு வாழ்த்து என எத்தனை வாழ்த்துக்கள்!

'வாழ்த்த வாய்' என்றார் அப்பரடிகள்!

வாய் ததும்பிய வாழ்த்துப் போலப் பரிசு ஒன்று உண்டா? ஆயிரம் பேர் வாழ்த்து பூனையையும் ஆனையாக்கும் என்பது பழமொழி!

"வாழ்த்துவதும் தாம்வாழ" என்பது பொதுநலமே தம்நலமும், தம்நலமே பொதுநலமும் ஆவதில்லையா? அந்த வாழ்த்து 'வாழ்க வளத்துடன்' என வேண்டியது 'வாழ்க வளமுடன்' என ஆகியதும் பெருகியதும் காண நேர்கிறதே. அத்து என்னும் சாரியை இல்லாமல் எந்த வேற்றுமையும் ஏற்குமா வளம்.

வளதை, வளதால், வளதின், என வருமா? மரபு பேணல் அனைவர் கடமையுமாம்! ஒருவர் காட்டிய வழி பல்லாயிரவர் வழியாகியதே! மாற்றுதல் எளிதா? வாழ்த்துப் பிழைபடலாமா?

**வாழிய நலனே! வாழிய நிலனே!**

**வாழிய மொழியே!**

திருவரங்கம்
கந்தசாமி - அழகம்மை அறக்கட்டளையர்



க. சுப்பிரமணியனார் - வசந்தா



க. கோபாலனார் - தேன்மொழி

The Printing House,Try-23.Ph:2420121